மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 23 செவ்வாய்க்கிழமை (08.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 286

### கூட்டமைப்பினருக்கு ஜனாதிபதி உறுதியளிப்பு

# உறவினர்கள் உறுதிப்படுத்தினால் அகதிகளைக் கூட்டிச் செல்லலாம்

## கண்ணிவெடி அகற்றிய பின்னரே வன்னியில் மீள் குடியேற்றம்

கொழும்பு, செப்ரெம்பர் 08

★ வவுனியா முகாம்களில் உள்ள அகதிகளை, வெளியில் உள்ள அவர்களின் உறவினர் ள் சென்று உறுதிப்படுத்தினால், முகாம்களில் இருந்து அவர்கள் விடுவிக்கப்படுவர்- அகதிகளைக் கூட்டிச் செல்லலாம். அதில் எந்தச் சிக்கலும் இல்லை.

★கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னரே வன்னியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவர்.



★விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்று கூறித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 10,000 இளைஞர்களின் விவரங்கள், முகாம்களில் உள்ளோர் பார்ப்பதற்காக அங்கு அரச அதிகாரிகளால் ஒட்டப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முதன் முதலாக நடைபெற்ற பேச்சுக்களின் போது மேற்கண்ட உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கினார். (16 ஆம் பக்கம் பார்க்க)

### "சனல் - 4" புதிய வீடியோப்படங்கள்

## முகாம் சேற்றுத் தரையில் சக்தி இழந்து துவண்டு கிடக்கும் அகதிகளின் கோலம்!

லண்டன், செப்.08

ஐ.நாவின் நிதிஉதவியுடன் வவுனியாவில் இயங்கும் அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களின் மிகப்பரிதாபமான நிலையை எடுத்துக்காட்டும் வீடியோக் காட்சிகளை 'சனல் -4' தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியுள்ளது.

முகாம்களில் மக்கள் வாழ்வை அவலப்படுத்தும் நிலைமைகளை வெளிப்படுத்தும் வீடியோக் காட்சிகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் இன்னும் 100 வீதமும் ஒழிக்கப்படவில்லை; அவர்களில் ஒளிந்திருப்போர் கிழக்கில் தாக்குதல் நடத்தும் சாத்தியம்

### மின்னேரியாவில் வைத்து பொலிஸ் மா அதிபர்



கொழும்பு, செப்.08

விடுதலைப் புலிகளிடம் இருந்து வரக்கூடிய அச்சுறுத்தல் இன்னமும் 100 வீதமும் வெற்றி கொள்ளப்படவில்லை. மே மாதத்தில் விடுதலைப்புலிகள் இராணுவரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்களில் பலர் எஞ்சி உள்ளனர்; இயங்குகின்றனர். குறிப்பாக இந்தப் பிரதேசங்களில் ஒளிந்து இருக்கிறார்கள். அவர்கள் சாதாரண வேலைகளில் ஈடுபடுவது (16 ஆம் பக்கம் பார்க்க)



## 'சனல் 4' வீடியோக் காட்சி போலியானது என சோதனையில் நிரூபணம் என்கிறது அரசு

### ஐ.நாவுக்கும் சொல்ஹெய்முக்கும் தடயவியல் அறிக்கை அனுப்பப்படும்

கொழும்பு, செப். 08

'சனல் - 4' தொலைக்காட்சி ஒளிபரப்பிய, இளைஞர்கள் சிலரைப் படையினர் சுட்டுக் கொல்வது போன்ற சர்ச்சைக்குரிய வீடியோக் காட்சி தனித்தனியாக நான்கு தடயவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அது போலியானது என்று நிரூபிக்கப்பட்டு விட்டது என அரசு நேற்று அறிவித்தது.

இந்தத் தடயவியல் பரிசோதனை அறிக்கைகளை ஐ.நா.செயலாளர் நாயகம் பான் - கீ - மூன், நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோருக்கும் அந்தக் காட்சியை ஒளிபரப்பிய 'சனல் - 4' உள்ளிட்ட தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அல்ஜசீரா தொலைக்காட்சியால் இலங்கைக்கு அடுத்த தலையிடி

கொழும்பு,செப். 08

வன்னி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகளின் அவல நிலை குறித்து 'அல்ஜசீரா' தொலைக் காட்சிச் சேவை சுயாதீன விசாரணை அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது.

இம்முகாம்களிலுள்ள அகதிகள் மற்றும் இம்முகாம்களில் மனிதாபிமான சேவைகளில் ஈடுபட்டிருக்கும் மனிதாபிமானப் பணியாளர்கள் ஆகியோரை 'அல்ஜீரா' பேட்டி கண்டுள்ளது.

தமிழ்ப் பிரஜைகளுக்கு எதிராகப் படுகொலைகள், யுத்தக் குற்றங்கள், கற்பழிப்புகள், கடத்தல்கள், சித்திரவதைகள், மனிதாபிமானமற்ற கொடூர நடத்தைகள், கைதுகள் மற்றும் தடுத்து வைப்புகள் உட்பட வன்முறை நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்றும் சர்வதேச சமூகம் கடுமையாக குற்றஞ்சாட்டி வருகிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ரி.எம்.வி.பி. அலுவலகத்தை அகற்றக் கோரி அக்கரைப்பற்றில் மீண்டும் மக்கள் கலகம்!

### ஒருவர் பெற்றோல் ஊற்றித் தற்கொலை செய்ய முயற்சி!!

கொழும்பு, செப். 08

அக்கரைப்பற்றுப் பகுதியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் காரியாலயத்தை அகற்றக் கோரி நேற்று மீண்டும் மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

நேற்று காலை 10 மணியளவில் சின்னமுகத்துவாரம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர் என்று கூறப்பட்டது.

அக்கரைப்பற்று பொலிஸ்நிலையத்துக்கு அருகில் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆப்கான் மீதான நேட்டோவின் வான் தாக்குதல்; விசாரணை நடத்தக் கோருகிறார் ஜேர்மன் அதிபர்

பேர்லின், செப். 08

வட ஆப்கானிஸ்தானில் சிவிலியன்கள் உட்பட டசின் கணக்கானோரை பலி கொண்ட விமானத் தாக்குதல் தொடர்பாக உடனடி விசாரணையை மேற்கொள்ளுமாறு நேட்டோ படையின் தலைமையகத்தை ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மேர்கேல் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இவ் விமானத் தாக்குதலுக்கு ஜேர்மன் தளபதிகளே உத்தரவிட்டனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தாக்குதலால் ஆப்கானில் நிலைகொண்டுள்ள ஜேர்மன் தளபதிகளுக்கும், அமெரிக்கத் தளபதிகளுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் கடத்தப்பட்ட இரண்டு எண்ணெய் தாங்கிகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாங்கிகள் வெடித்து சிதறியதில் 56 தலிபான் தீவிரவாதிகள் உட்பட 90 பேர் பலியாயினர்.

ஆப்கானின் வடக்கு பகுதியில் உள்ள குந்தஸ் மாகாணத்திலிருந்து பாக்லன் பகுதிக்கு நேட்டோ படைகளுக்கு எண்ணெய் ஏற்றிச் சென்ற இரண்டு எண்ணெய்த் தாங்கிகளை தலிபான்கள் வியாழக்கிழமை இரவு கடத்திச் சென்றனர்.

இந்நிலையில், அவர்கள் அந்த தாங்கிகளில் இருந்த எண்ணெயை சார்தாரா மாவட்ட பகுதியில் உள்ளவர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தபோது, அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஜேர்மனியைச் சேர்ந்த நேட்டோ விமானப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

அப்போது தலிபான்களும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த மோதலின் போது அந்த எண்ணெய் தாங்கிகள் வெடித்துச் சிதறின.

# ஹமாஸ் தலைவர் எகிப்துக்கு விஜயம்

காசா, செப். 08

பலஸ்தீனத்தின் ஹமாஸ் பிரிவுத் தலைவரான காலித் மெஷால், எகிப்துக்கு விஜயம் செய்துள்ளார். இவர் தமது போட்டி அரசியல் அமைப்பான பத்தா வுடன் மீள் இணக்கப்பேச்சுகளுக்குத் தலைமை தாங்கும் எகிப்திய உளவுத்துறை அதிகாரிகளை முதன்முறையாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். பத்தா அமைப்பை வழி நடத்தும் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூட் அப்பாஸ் சனிக்கிழமையன்று எகிப்து தலைநகரான கெய்ரோவில் இருந்தார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

பலஸ்தீனத்தில் பிடித்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் சிப்பாய் கிலாட் ஷாலிட் உட்பட இரு தரப்பு கைதிகளையும் பரிமாறிக்கொள்ளும் திட்டத்துக்கு இஸ்ரேலையும், ஹமாஸையும் இணங்க வைக்கும் முயற்சிகளில் மெஷாலின் இந்த விஜயத்தின் மூலம் முன்னேற்றம் ஏற்படக்கூடும் என புதிய ஊகங்கள் ஏற்பட்டுள்ளன.

# இந்திய புரோகிதர்கள் நியமனத்திற்கு நேபாளத்தில் தொடர்ந்து எதிர்ப்பு

காத்மாண்டு, செப். 08

நேபாளத்தின் பிரபல கோவிலான பசுபதிநாத் கோவிலில் பூஜை செய்வதற்கு இந்திய புரோகிதர்கள் நியமிக்கப்பட்டுள்குள் கடந்த வெள்ளிக்கிழமையன்று புகுந்த மாவோயிஸ்டுகள் இந்திய புரோகிதர்கள் இரண்டு பேர் மீதும் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் அவர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது.



நேபாளத்தில் பூஜை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள இரு இந்தியப் புரோகிதர்களுக்கு அந்நாட்டு சிப்பாய்கள் பாதுகாப்பு அளிக்கிறார்கள்.

ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேபாளத்தில் தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

நேபாளத்திலுள்ள புகழ்வாய்ந்த கோவில் பசுபதிநாத் கோவிலாகும். இங்கு பூஜைகள், இதர கோவில் சடங்குகள் ஆகியவற்றை செய்வதற்கான பணியில் இரண்டு இந்திய புரோகிதர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கிரிஷ் பட்டா, ராகமேந்திர பட்டா ஆகிய இரண்டு பேரும் இக்கோவிலில் பூஜைகள் செய்து வருவதற்கு உள்ளூர் மாவோயிஸ்ட்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். உள்ளூர் குருக்களே இக்கோவில் பூஜைகள் செய்வதற்கு நியமிக்கப்படவேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில், பசுபதிநாத் கோவிலுக்குள் ...

இந்திய குருக்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. இதனையடுத்து, இத் தாக்குதல் சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்திருந்த நேபாள அரசு, இந்திய புரோகிதர்கள் இருவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று கூறியிருந்தது.

இருப்பினும், பசுபதிநாத் கோவிலில் இந்திய புரோகிதர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதற்கு மாவோயிஸ்டுகள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேபாள புரோகிதர்கள்தான் பசுபதிநாத் கோவிலில் பூஜை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தி அவர்கள் முழக்கங்கள் எழுப்பி வருகின்றனர்.

# மெக்ஸிக்கோவில் 17 நோயாளர்கள் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை

மெக்ஸிக்கோ, செப். 08

மெக்ஸிக்கோ சியூடாட் ஜுரெஸ் நகர மறுவாழ்வு மையத்தில் முகமூடி தரித்த ஆயுததாரிகளால் 17 நோயாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை அப் பழக்கத்திலிருந்து மீட்டு மறுவாழ்வு அளிப்பதற்கான மையமாகுமிது.

இப்படுகொலைகள் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்காக மெக்ஸிக்கோ இராணுவம் அதிரடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது. இச்சம்பவத்துக்கு மூளையாக செயற்பட்ட போதைப்பொருள் கடத்தல் கும்பல் தலைவர் ஜேஸ் ரெடோல்போ எஸ்காஜெடா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த ஆண்டு வட மெக்ஸிக் கோவில் இரு அமெரிக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திலும் இவர் தொடர்புடையவர் என புலனாய்வுத் துறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மறுவாழ்வு மையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்துக்கு போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கிடையே மூண்ட மோதல்தான் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் டிப்ளோமா பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

நாளை (09.09.2009) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரிய குளம் சந்தியில் அமைந்துள்ள உயர் பட்டப்படிப்புகள் கல்லூரியில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் நிரந்தர நியமனம் சம்பந்தமான பட்டியல் பரிசீலிப்பதற்காக அனைவரையும் ஒன்று சேரும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒருங்கமைப்பாளர்கள்
(88684) நி. ஞானேஸ்வரன், எஸ். பரமேஸ்வரன் 077 8736995


# ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்: 7 பேர் உயிரிழப்பு; 18 பேர் படுகாயம்

பக்தாத், செப். 08

மேற்கு ஈராக்கிய நகரான ரமாதியின் வடக்கேயுள்ள பொலிஸ் சோதனைச்சாவடிக்கருகில் கார்க்குண்டொன்று வெடித்தது. இதில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர். தற்கொலையாளியும் பலியானார் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

சோதனைச்சாவடியில் பொலிஸார் மும்முரமாகக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அங்கு பெருந்தொகையான சிவிலியன்கள் சோதனைக்காகக் காத்துக்கொண்டிருந்தனர். அச்சமயம் இக்கார்க்குண்டு அதிபயங்கரமாக வெடித்தது என பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

காரொன்றை நபரொருபர் விரைவாக செலுத்தி வந்தார். காரை நிறுத்துமாறு பொலிஸார் சமிஞ்ஞை காட்டினர். சோதனைச் சாவடியை அண்மித்ததும் அதிலிருந்து பயங்கர ஓசையுடன் குண்டு வெடித்தது. பலியானோரிலும், காயமுற்றோரிலும் பொலிஸாரும் சிவிலியன்களுமடங்குவர் என்றும் அவர் விவரித்தார்.

ரமாதி நகரம் அன்பார் மாகாணத்தில் அமைந்துள்ளது. இப்பிராந்தியம் ஒரு காலத்தில் தீவிரவாதிகளின் கோட்டையாகத் திகழ்ந்தது. 2006 ஆம் ஆண்டு உள்ளூர் சுனி பழங்குடி இன மக்கள் தலைவர்களுக்கும், அமெரிக்கக் கூட்டுப் படைகளுக்குமிடையே நல்லிணக்கப்பாடு ஏற்பட்டது.

அது முதல் இப் பிராந்தியத்தில் அமைதி நிலவி வந்தது. ஜூன் மாத இறுதியில் ரமாதி உட்பட அநேக நகரங்களிலிருந்து அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகள் வெளியேறின. பாதுகாப்புப் பொறுப்பை ஈராக்கிய படைகள் ஏற்றன. அதுமுதல் [illegible]

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து தனபாலசிங்கம் (டில்கா)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பிமுத்து தனபாலசிங்கம் நேற்று (07.09.2009) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து-இலட்சுமியின் மகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், பகவான் (லண்டன்), பவதாரணி (கொழும்பு), ஜனகன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், நிரஞ்சன், ராகினியின் மாமனாரும், காலஞ்சென்ற திருக்குலசிங்கம், சிவபாலசிங்கம் (அமெரிக்கா), திருமதி. தி. நாகராசா, காலஞ்சென்ற திருமதி. வ. சந்திரசேகரம், பூபாலசிங்கம், திருமதி ஜெ.அரசரட்ணம் ஆகியோரின் சகோதரரும், கீர்த்தனா, சஞ்சனா, திலிசனா, தான்யலக்சுமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- நிரஞ்சன்

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தியாகராசா




புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரம், கண்ணகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது இல. 100, சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்தம்பி தியாகராசா நேற்று (07.09.2009) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் (அன்னம்) அன்புக் கணவரும், சதானந்தன், குகதாசன், ராதிகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், பாலசுகி (ஆசிரியை, யா/கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம்), கவிதா, பராபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷாயின், அக்ஷயன், அஸ்வின், அனுஷன், அனோஜன், டெலானி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைப் பேரனும், யோகம்மா (லண்டன்), காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் நாகம்மா (கொழும்பு), கண்ணம்மா (இந்தியா), சோமசுந்தரம் (லண்டன்), காலஞ்சென்ற பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகரட்ணம் (லண் டன்), பூபாலசிங்கம் (சுவிஸ்), குமரையா (கொழும்பு), பன்னீர் செல்வம் (கொழும்பு), செல்வம் (லண்டன்), திலகவதி (வவுனியா), சுப்ரமணியம் (வவுனியா), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் மீனாம்பிகை (வவுனியா), புனிதவதி (கொழும்பு), ஞானாம்பிகை (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 100, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல் மனைவி, பிள்ளைகள். (88685)

### திருமதி மார்க்கண்டு பொன்னம்மா



49, ராணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மார்க்கண்டு பொன்னம்மா நேற்று (07.09.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மு.மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி, திலகேஸ்வரன் (நோர்வே), நகுலேஸ்வரன்(நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும், க. வடிவேலின் (அதிபர், யாழ். நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்) மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

49, ராணி வீதி, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர் T.P : 0602734030.

(88679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அதீத அதிகாரத்தின் விபரீத விளைவு தெற்குக்கு இப்போதுதான் புரிகிறது

'இலங்கைப் பொலிஸார் தரப்பில் பிழைத்துப் போனது என்ன?'

- தென்னிலங்கை ஆங்கில, சிங்கள நாளேடுகள் சில இந்த சாரப்பட கேள்வி எழுப்பும் தலைப்புகளைக் கொண்ட செய்திக் கட்டுரைகள் மூலம் இலங்கைப் பொலிஸ் தரப்புக் குறித்து அலசி ஆராய முற்பட்டிருக்கின்றமையை அண்மைக்காலத்தில் காண்கிறோம்.

தென்னிலங்கையில் பொதுமக்களுக்கு எதிராக பொலிஸ் வன்முறை அநீதியான முறையில் அண்மைக் காலங்களில் பிரயோகிக்கப்பட்டமை தொடர்பாகத் தென்னிலங்கை ஊடகங்களில் பரபரப்பாக வெளிவந்த செய்திகளின் பெறுபேறாகவே இத்தகைய கேள்விகள், ஆய்வுகள் தென்னிலங்கையில் புதிதாகப் பிறந்திருக்கின்றன என்பது தெரிந்த விடயம்தான்.

அங்குலானையில் இரு சிங்கள இளைஞர்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டமை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் மகன் சில பொலிஸாருடன் சேர்ந்துசென்று, தான் கல்வி பயிலும் தொழில்நுட்பக் கல்லூரியின் சக மாணவன் ஒருவனைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று தாக்கியமை போன்ற சில சம்பவங்கள் இத்தகைய கவலைகளை - வினாக்களை - தென்னிலங்கையில் திடீரெனக் கிளப்பியுள்ளன என்பதும் கண்கூடு.

ஏதோ இதற்கு முன்னர் பரிசுத்தமாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமலும் இருந்த தூய காவலர்கள் இப்போதுதான் அத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது போலவும் -

இதனால், இக்காவலர்களுக்கு இப்போது மட்டும் என்ன நடந்தது என்ற ஆச்சரியமான கேள்வி தெற்கில் கிளம்பியிருப்பது மாதிரியும் -

தற்போது காட்டப்படுவது விநோதமானதுதான்; விந்தையானதுதான்.

'தனக்குத் தனக்கென்றால் சுளகும் படக்குப் படக்கென அடிக்குமாம்' - என்பார்கள். அது போன்றதுதான் தெற்கின் இந்தக் கொதிப்பும்.

இதுவரை வடக்கு, கிழக்கில் கட்டவிழ்ந்த மனித உரிமை மீறல்கள் இப்போது அங்கு வீரியம் தணிந்த நிலையில், தெற்கின் பக்கம் தமது பார்வையை சற்றுத் திருப்பியிருக்கின்றன. அவ்வளவுதான். அதனால் தென்னிலங்கை - குறிப்பாகத் தென்னிலங்கை ஊடகத்துறை - இதை ஏதோ ஒரு புதுவிடயம் போலக் கருதி, காட்டி, வெளிப்படுத்தித் துள்ளிக்குதிக்கின்றது.

வடக்கு - கிழக்கில், தமிழர் தாயகப் பகுதியில், பயங்கரவாதத்தை அடக்கும் 'புண்ணிய செயலுக்கு' என்ற கோதாவில் வழங்கப்பட்ட - குற்றப் பொறுப்புகளில் இருந்து விசேட விலக்களிக்கும் - சிறப்புரிமையை சம்பந்தப்பட்டோர் இப்போது தெற்கில் அவிழ்த்துவிட்டுத் தமது கைவரிசையைக் காட்ட முற்படும்போதுதான் துள்ளுகின்றது தென்னிலங்கை.

வடக்கு, கிழக்கில் இதுவரை இடம்பெற்றவையுடன் -

அல்லது தெற்கில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இலக்கு வைத்து இதுவரை மேற்கொள்ளப்பட்டவையுடன் -

ஒப்பிடும்போது தென்னிலங்கையில் இப்போது அப்படி ஒன்றும் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் சட்டத்தின் காவலர்கள் ஈடுபட்டு விடவில்லை என்பதுதான் இவ்விடயங்களில் மோசமான அனுபவங்களை இதுவரை எதிர்கொண்டு, தாங்கிக் கொண்ட தமிழர்களின் கருத்தாகும்.

சட்டத்தின் காவலர்கள் என்று அழைக்கப்படுவோருக்கு இதுவரை விசேட கவசமாய்ப் பாதுகாப்பும், சிறப்புரிமைகளும், குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிப்பும் வழங்கிவந்த அவசரகாலச் சட்ட விதிகள் யோன்றவையும், அவற்றின் பிரயோகமும் இதுவரை அதிக கவனத்தையும், சிரத்தையையும் தமிழர் தரப்பு மீதே காட்டி வந்தன. அதனால் அந்நிலையைப் பார்த்திருந்து, வரவேற்று, மகிழ்ந்தது தெற்கு. இப்போது அந்த விதிகளின் பார்வையும் சீற்றமும் தெற்கின் பக்கம் சற்றுத் திரும்பியதும் அது கோபம் கொள்கின்றது.

பௌத்த, சிங்களத் தீவிரப் போக்குடைய கட்சிகள் எல்லாம், சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டத்தை அடக்குவதற்கான பிரதான கருவியாக அவசரகாலச்சட்டம் பயன்படுத்தப்பட்டபோது அதனை விழுந்தடித்து, வரவேற்று, வாழ்த்தி, ஆதரித்து மகிழ்ந்தன. தமக்குள் மெச்சிக்கொண்டன.

ஆனால் இப்போது ஆளும் தரப்பின் அரசியல் காய் நகர்த்தல்களுக்கும் அதுவே பயன்படுத்தப்படுகின்றபோதுதான் - தங்களுக்கு எதிராகவே அந்த அதிகாரத்தின் அரூபக் கரங்கள் பிரயோகிக்கப்படுகின்ற போதுதான் - உண்மையையும், யதார்த்தத்தையும் புரிந்துகொண்டு அவற்றுக்கு எதிராக சீறிக் கிளம்புகின்றன அவை.

அரச நிர்வாகத்தின் ஊழல், மோசடிகளை முகர்ந்து கண்டுபிடிக்கும் புலனாய்வு இதழியல் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று சிங்கள ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜே.வி.பி. ஆதரவுப் போக்குடைய 'லங்கா' சஞ்சிகையின் அந்த மூன்று ஊடகவியலாளர்களையும் மடக்குவதற்கும், அவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தி கண்மூடித்தனமாகத் தடுத்து வைப்பதற்கும் இதே அவசரகாலச்சட்ட விதிகள்தாம் ஆளும் தரப்புக்கு உதவுகின்றன என்பதை உணர்ந்த பின்புதான், இப்போது - இனிமேலும் - நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட விதிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதா என்பது குறித்து மறுபரிசீலனை செய்ய முற்படுகின்றது ஜே.வி.பி. 'தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடியும், காய்ச்சலும்' - என்பார்கள்.

அதுபோலவே, அதிகாரத் தரப்புகளுக்கு - ஆளும் சக்திகளுக்கு - வழங்கப்பட்ட அதீத அதிகார வலிமையின் விளைவு என்னவென்பது இப்போது சற்றே அனுபவிக்கத் தொடங்கும்போதுதான் தெற்குக்கு விளங்க ஆரம்பித்துள்ளது.

# வன்னி யுத்தத்தில் உயிரிழந்தவர்களைப் பதிவு செய்வதற்கு பிரதேச செயலகங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.8

வன்னியில் நடைபெற்ற யுத்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் இறப்புக்களைப் பதிவு செய்ய முடியாமல் அவர்களின் உறவினர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் ஒரு பகுதியினர் அண்மைக் காலங்களில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் வன்னியில் யுத்தம் காரணமாக உயிரிழந்த தமது உறவுகளின் இறப்புக்களைப் பதிவு செய்வதற்கு முயன்று வருகின்றனர்.

ஆனால் இந்த இறப்புக்களைப் பதிவு செய்வதற்கு பிரதேச செயலகங்களோ, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளோ எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என சம்பந்தப்பட்ட மக்கள் தரப்பில் இருந்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் தொடர்ச்சியாக யுத்தம் நடைபெற்றதனால் அங்கு இடம்பெற்ற இறப்புக்களைப் பதிவு செய்ய முடியாத நிலை காணப்பட்டது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இறப்புக்களைப் பதிவு செய்து மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-6-68)

# ரெலிக்கொம் சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளிலிருந்து அழைப்புக்களைப் பெறுவதில் நெருக்கடி நிலை

யாழ்ப்பாணம்,செப்.8

சிறிலங்கா ரெலிக்கொம் சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளிலிருந்து தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடி நிலை நிலவுவதாகவும் இதனால் அழைப்புக்களை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் பாவனையாளர்கள் விசனம் அடைந்துள்ளனர்.

அதி உச்ச நேரம், உச்சநேரம் உள்ளிட்ட ஏனைய நேரங்களில் ரெலிக்கொம் சி.டி.எம்.ஏ.தொலைபேசியிலிருந்து மற்றொரு ரெலிக்கொம் சி.டி.எம்.ஏ.தொலைபேசிக்கும் ரெலிக்கொம் கேபிள் தொலைபேசிக்கும் இணைப்புக்களைப் பெறுவதில் நெருக்கடி நிலை தொடர்ந்து வருகின்றது.

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வலையமைப்புக்குள் உள்ள தொலைபேசிகளுடன் மாத்திரமின்றி ஏனைய வலையமைப்புக்களில் உள்ள தொலைபேசிகளுக்கும் அழைப்புக்களை இலகுவில் பெற முடியாதுள்ளது.

யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா ரெலிக்கொம்மின் சி.டி.எம். ஏ.தொலைபேசி இணைப்புகள் பொதுமக்களுக்கு தாராளமாக வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் பாவனையாளர் அன்றாடம் திண்டாடி வருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையான சி.டி.எம்.ஏ.தொலைபேசி இணைப்புக்களை யாழ்ப்பாணத்தில் ரெலிக்கொம் வழங்கியுள்ளபோதும் அவற்றின் எண்ணிக்கைக்கேற்ப தொலைத்தொடர்புக் கோபுரங்களில் போதிய அளவு அன்ரனாக்கள் பொருத்தப்படாமையே இணைப்புக்களைப் பெறுவதில் நெருக்கடிநிலை ஏற்படக் காரணம் என்று கூறப்படுகின்றது. இணைப்புக்கள் வழங்கப்படும் எண்ணிக்கை அதிகரிக்க அழைப்புக்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவது குறித்து பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை-

ரெலிக்கொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள கேபிள் தொலைபேசி இணைப்புக்களில் 2,3 இலக்கங்களில் ஆரம்பமாகும் தொலைபேசி இலக்கங்களுக்கும் அழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் தொடர்ந்தும் நெருக்கடிநிலை இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (50-236-86)

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பயண ஒழுங்குகள்

யாழ்ப்பாணம்,செப்.08

முகாமைத்துவ உதவியாளர்களாக புதிதாக நியமனம் பெற்றவர்கள் வடக்கு மாகாண சபையின் தலைமை அலுவலகத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் தமது கடமையைப் பொறுப்பேற்குமாறு வடக்கு மாகாணப் பொது நிர்வாக சபை அறிவித்துள்ளது.

இவர்களுக்கான பயண ஒழுங்குகள் யாழ்.அரச அதிபரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால், நாளை புதன்கிழமை பயண ஒழுங்குகளுடன் சிங்கள மகா வித்தியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (250-201)

## தென்மராட்சி வலயப் பாடசாலைகளில்

# ஆயுள்வேத மூலிகைத் தோட்டங்கள் அமைக்கும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 08

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆயுள்வேத மூலிகைத் தோட்டங்கள் அமைக்கும் திட்டம் கடந்த 6ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலங்கையின் மூலிகைப் பரம்பலையும், யாழ்.மாவட்டத்தின் மூலிகைப் பரம்பலையும் ஊக்குவிப்பதற்கு இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்னிலங்கையைச் சேர்ந்த தாவரவியல் துறைப் பேராசிரியர் பியல் சமரசிங்க, தொழில்நுட்ப உதவி ஆணையாளர் வீரசிங்க, ஆயுள்வேத திணைக்கள இணைப்பாளர் திருமதி விக்னவேணி செல்வநாதன் ஆகியோருடன் யாழ்.பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விவியன் சத்தியசீலன், மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் திருமதி நவலட்சுமி நித்தியகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வலயத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் பாடசாலைகளில் மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கான விவசாய உபகரணங்கள், மூலிகைத் தோட்டம் அமைப்பதற்குரிய செலவுத் தொகை என்பன வழங்கப்பட்டன. (50-207)

## வடமாகாண விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.8

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள 2009 ஆம் ஆண்டுக்கான வடமாகாண விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் மாநகர சபை ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, சாவகச்சேரி, வேலணை ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்கள், காரைநகர் உதவி அரசாங்கஅதிபர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி), கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனம் பொருள்), யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சேதனப்பசளை எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.8

வவுனியாவில் இருந்து ஏ-9 வீதியூடாக சேதனப் பசளையை (ஆட்டெரு, மாட்டெரு, கூட்டுடெரு) லொறிகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென யாழ். மாவட்டத் தேசவள விவசாயிகள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

சேதனப்பசளை தேவைப்படும் விவசாயிகள் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண விவசாயிகளின் தேவைக்கென முதற் கட்டமாக இம் மாத நடுப்பகுதியில் 5 லொறிகள் மூலம் வவுனியாவில் இருந்து சேதனப் பசளை எடுத்து வரப்படவுள்ளதாகத் தேசவள விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (50-320)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 24 | 09.09.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | மு.இ. 09.38வரை |
| நட்சத்திரம்: | பரணி |
| | பி.இ.04.43 வரை |
| சுபநேரம்: | 04.34 - 06.04 |
| ராகுகாலம்: | 12.04 - 01.34 |

# நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களில் மூன்று பேர் காச நோயினால் பாதிப்பு

## பரவாமல் தடுக்க உகந்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.8

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் மூன்று பேர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி சி.யமுனானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு காசநோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்குச் சென்றசமயம் இந்த காசநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் கைதடியில் உள்ள நலன்புரி நிலையத்திலும், மற்றைய இருவரும் அல்லாரை இராமாவில் நலன்புரி நிலையத்திலும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இனம் காணப்பட்டுள்ள நோயாளர்களுக்கான தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதுடன் முகாம்களில் காசநோய் மேலும் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




ஸ்ரேசன் வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த மதிருபன்-றஜனி (கிருபா) தம்பதியினரின் செல்வப் புதல்வி நட்சத்திரா இன்று (08.09.2009) செவ்வாய்க் கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

அவரை அன்பு அம்மா, அப்பா, அன்பு அக்கா இலக்கியா, உற்றார், உறவினர் யாவரும் கற்புலத்து மனோன்மணி அம்பிகையின் துணையுடன் சீரும் சிறப்பும் பெற்று பல் கலை யும் கற்று பல்லாண்டுகாலம் வாழக வென வாழ்த்துகின்றார்கள்.

*என்.மதிருபன்*
*ஸ்ரேசன் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

அன்பு அம்மம்மா
மல்லிகாதேவி.

---



உ
சிவமயம்

## அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான முன்னாள் பிரதம குருக்கள்

பிரம்மஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்கள் ஞாபகார்த்த

**நூல் வெளியீட்டு விழா**

## ஆபஸ்தம்பீஜ பார்வண மஹாளய சிராத்தப் பிரயோகம்

காலம்: இன்று (08.09.2009) செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணி
இடம்: யா/அரியாலை சித்திவிநாயகர் ஆலய மண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**

மங்கல விளக்கேற்றல்:
இறைவணக்கம்:
ஆசியுரை: **அதிவந்தனீய ஐ.மகேஸ்வரக் குருக்கள்** (சுதுமலை) (சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி)
தலைமையுரை: **பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா** (கோப்பாய் சிவம்) அவர்கள்
தொடக்கவுரை: **பிரம்மஸ்ரீ கு.சரவணபவக் குருக்கள்** (இணுவில்)
அறிமுகவுரை: **பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா** (நல்லூர்) (சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
நூலாசிரியர் உரை: **பிரம்மஸ்ரீ சோ.வரதராஜ சர்மா** (கொழும்புத்துறை)
ஆய்வுரை: **பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்** (காயத்ரிபீடம், இணுவில்)
நூல் வெளியீடு:
நன்றியுரை:

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நீர்நொச்சித்தாழ்வு,
அரியாலை. (88667) **குடும்பத்தினர்.**

---

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 222 8093, E-mail:alliancejaffna@yahoo.com

## Learn French the French Way
## French Classes

இலங்கையிலுள்ள French Embassy மூலமும் France இல் உள்ள Alliance Francaise de Paris இன் ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
மாணவர்கள், அலுவர்கள், ஆசிரியர்கள், மொழிபயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் கற்கலாம்.
சனி, ஞாயிறுகளில் ஒரு பிரிவும், கிழமை/நாள்களில் இன்னுமொரு பிரிவும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
விவரங்களை நேரில்/ தொலைபேசியினூடாக பெறலாம். (88667)

---

## டயலொக் G.S.M நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் ஜனாதிபதி தங்கக்கோப்பை கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2009

யாழ். மாவட்டத்தில் மேற்படி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆண், பெண் இருபாலாருக்கும் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. எனவே இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள சங்கச் செயலாளரின் இல்லத்தில் பெற்று அதனைப் பூர ணப்படுத்தி 16.09.2009 ஆம் திகதிக்கு முன்பு செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்,
(88675) தொலைபேசி இல :- 021 222 6723

---

# இதய அஞ்சலி



எம்முடன் பணிபுரியும் பாலேந்திரன் நித்யா அவர்களின் அன்புத்தாயார்

**பாலேந்திரன் பரமேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பீடாதிபதி மற்றும் அலுவலர்கள்,
பட்டப்பின்படிப்புகள் பீடம்,
(88677) யாழ்.பல்கலைக்கழகம்.

---

# விபத்தில் இருவர்காயம்

வண்ணை, செப். 08

கட்டுப்பாட்டை மீறிச்சென்ற ஸ்கூட்டர் மதில் ஒன்றுடன் மோதியதால் அதில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிறன்று யாழ். கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் இடம்பெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த சிந்தா டிக்ஸன் (வயது 25), வண்.வடமேற்கைச் சேர்ந்த சிவராசா பிரதீபன் (வயது 26) ஆகியவர்களே படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ் .போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (1-160)

# புலோலி, அம்பன் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு

கெருடாவில், செப்.08

புலோலி, அம்பன் ஆகிய பிரதேச விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கான உரமானியப்படிவங்கள் தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றன.

கமக்காரர் அமைப்புக்கள் மூலம் வழங்கப்பட்டுவரும் இந்தப்படிவங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக தமது எல்லைக்குட்பட்ட அமைப்பிடம் பெற்று மீள ஒப்படைக்குமாறு பெரும்போக அலுவலர் எஸ். உருத்திரேஸ்வரன் கேட்டுள்ளார். (1-253)

# தென்மராட்சி தெற்கில் நெற்செய்கைப் பதிவுகள் நாளை முதல் மீளாய்வு

யாழ்ப்பாணம், செப். 08

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ கமக்கார அமைப்புப் பிரிவில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப் பதிவு செய்ய அனைவரினது பதிவுகளும் நாளை புதன்கிழமையும் நாளைமறுதினமும் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளரின் பணிப்பின் பேரில் பதிவுகளை மீளாய்வு செய்ய வேண்டியுள்ளதால் ஏற்கனவே பதிவு செய்த அனைவரும் கைதடி கமநல சேவைகள் நிலையத்திற்கு வருகைதருமாறு அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார்.இக்காலப் பகுதியில் பதிவுகள் மீளாய்வில் பங்குபற்றாதவர்களுக்கு உள்ளீடுகள் வழங்கப்படமாட்டது எனவும் அவர் அறிவித்துள்ளார். (1-207)

---

## தவறிவிட்டது

கடந்த ஞாயிற்றுக்கிழமை (06.09.2009) கொழும்பில் இருந்து வந்த சொகுசு பஸ்சில் உடுபுடைவை மற்றும் விளையாட்டுப் பொருள்கள் அடங்கிய பச்சை நிற பயணப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 212/11, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (Arolanka முன்பாக) 0777110960

## வீடு காணி விற்பனைக்கு

கொக்குவில் கே.கே.எஸ். வீதிக்கு சமீபமாக 7 பரப்புடன்கூடிய பழைய மாடி வீடும், ஆனைக்கோட்டை நவாலி வீதிக்கு சமீபமாக, 4 பரப்புடன் கூடிய மிக நல்ல நிலையில் உள்ள வீடும் உடன் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள் மட்டும் கீழ் உள்ள தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே. 0776029164, 0777551431

## அருள்முருகன் திருமணப்பணியகம்

உறுதியானதும் விரைவானதுமான திருமணங்களுக்கு நாம்உதவ, அனைத்து மணமக்களது பெற்றோரும் எங்களுடன் ஒத்துழையுங்கள். திருமணம் ஒரு நாள் நிகழ்வு மட்டுமல்ல, வாழ்க்கையின் தொடக்கமும் ஆகும். தகுந்த வரன் அமைய நம்பகமான திருமண சேவையை முதலில் இனம் காணுங்கள். விரும்பும் மணமக்களை நேரில் வந்து தேர்ந்தெடுங்கள்.
03, யாழ்வீதி,சிறாம்பியடி லேன்,(ஆரியகுளம் முன்பான லேன்)
யாழ்ப்பாணம்.T.P 021 222 9334

## தவறிவிட்டது

தலையாட்டி, மகாத்மா வீதி, அளவெட்டி என்னும் முகவரியுடைய சி. கந்தசாமி என்பவரது 139 - 2980 இலக்கங் கொண்ட மோட்டார் சைக்கிளின் இன்சூரன்ஸ் சேட்டிபிக்கற்றும், 2009 இற்கான ராக்ஸ்சும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0772487041 அல்லது, 021 5100206 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

நாவற்குழி, வீரபத்திரர்கோயிலடி, கைதடி என்னும் முகவரியுடைய சின்னவன்.முத்தையா என்பவரது தேசிய அடையாளஅட்டை (491071214V) தவறிவிட்டது.தயவுசெய்துகண்டெடுத்தவர்கள்உடுவில்-தெற்கு, பட்டியோலை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

உடுவில் தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வரட்ணம் பகீரதி என்பவரது தேசிய அடையாள அட்டை (827621110 V) 03.09.2009 அன்று யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பஸ்சில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (88678)

## ராஜீ திருமண சேவை

39 வயது கார்த்திகை நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம், நோர்வே பிராஜாவுரிமை பெற்ற மணமகனிற்கு அழகிய மணப் பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

P.M ஜெயரத்தினம், தொ.பே. இல -
158/3 நாவலர் வீதி, 077 ...5647
யாழ்ப்பாணம். (88657) 060 237 5980

---

# பணிதொடர எமது வாழ்த்துக்கள்



எமது செயற்பாட்டுக்குழுவின் காப்பாளரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். மாவட்ட மக்கள் தொடர்பாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) யின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான

## சில்வஸ்ரரர் அலன்ரின்
(உதயன் தோழர்)

அவர்கள் (03.09.2009) வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக (J.P.) பதவியேற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, எமது அமைச்சரின் வழிகாட்டலில் மக்கள் பணிகள் பல செய்து பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

மா. பரமேஸ்வரன் (ஈசன்)
நெடுந்தீவு. (88671) கோ. மோகனகுமார் (மோகன்)

---


# ஓவ்செற் பிறிண்டிங்

சகல விதமான ஓவ்செற் பிறிண்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

இம்பிரசன் சார்ஜ் (அடி கலி)

A3 - 1000ம் கொப்பி வரைக்கும் 150/= மட்டும்.
A4 - 1000ம் கொப்பி வரைக்கும் 50/

மாணவர்களுக்கு பயன்தரும் விதத்தில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ். வீதி (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை) யாழ்.
உயர் தொழில்நுட்பத்திலான நவீன முறை அச்சுப்பதிப்பகம்.
(ஏழையின் கல்வி வளர்ச்சிக்கு ஒளி ஏற்றும் நிறுவனம்)


---

# மரண அறிவித்தல்கள்

## இராசையா சண்முகதாஸ்

(அரச முகாமைத்துவ உதவியாளர்- தரம்1, உதவி அரச அதிபர் பணிமனை, வடமராட்சி கிழக்கு)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் அல்வாய், இலகடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சண்முகதாஸ் 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா தங்கரத்தினம் ஆகியோரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- ஞானாம்பிகை ஆகியோரின் மருமகனும், மனோரதியின் அன்புக் கணவரும், அபிராமி, அச்சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்திலின் பெரியதந்தையும், தர்சனின் (லண்டன்) மாமனாரும், சிவதாஸ் (Bank of Ceylon), தவமணிதேவி, இந்திரதாஸ் (Jaffna Hospital) ஈஸ்வரதாஸ் (Post Office, Jaffna) ஆகியோரின் சகோதரரும், கணகாம்பிகை, சிவ ஞானம், பவானி, உதயமலர் ஆகியோரின் மைத்துனரும், பிர்ந்தா, கீதன், தர்ஷி, சிவசுதன், திவ்விகா, மௌஷிகா, கிருஷ்ணன், நிகாஷன், நிவேதா, நிருத்திகா ஆகியோரின் பெரிய தந்தையும், சுகன்யா, அகல்யா, விஜயசங்கர், உதயசங்கர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2009) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பிகை வாசா,* தகவல்,
*அல்வாய் கிழக்கு,அல்வாய்.* (C. 560804) மனைவி, பிள்ளைகள்.

## பாலேந்திரன் பரமேஸ்வரி



சாமியன் அரசடி,கரவெட்டியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலேந்திரன் பரமேஸ்வரி 04.09.2009 வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தவனம் பாலேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தவனம் - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் கிரிதரன் (லண்டன்), காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் நித்யா(யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் மஞ்சுளாவின் (லண்டன்) அன்பு மாமியும் கவின் (லண்டன்), வைசாலி (லண்டன்), ஆர்த்தி (லண்டன்) ஆகியோரின் ஆசை அப்பம்மாவும் பொன்னையா மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற செல்லையா கிருஷ்ணபிள்ளை மற்றும் இராசையா சிவபாக்கியம், செல்வலிங்கம் புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.09.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாமியன் அரசடி, தகவல்:
கரவெட்டி. (88676) பா.நித்யா(மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடியில் ஈ-சொவ்ற் கணனி நிறுவனத் திறப்புவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் நிறுவனக்கிளையை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.
நெல்லியடி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஹேரத் மங்கள விளக்கேற்றுகிறார். கணனி அறையை கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் நாடாவெட்டித் திறந்து வைத்து கணனிகளை இயக்கி வைத்தார். (படங்கள்: சுந்தர்)

# இழந்துபோன சமூக விழுமியங்கள் அனைத்தையும் கல்வியினூடாக நாம் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்

## வலி.கிழக்குப் பிரதேச செயலர் உரை

அச்சுவேலி, செப். 8

இழந்துபோன சமூகவிழுமியங்கள் அனைத்தையும் கல்வியின் ஊடாக மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இந்தவகையில் மாணவர்கள் எதிர்காலச் சமூகத்தின் நற்பிரஜைகளாக வாழ்வதற்கான பண்புகளை மாணவப்பருவத்தில் கற்றுக்கொள்ள வேண்டும்.



மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இன்று வழங்கப்படுகின்ற உதவிகளை உரியமுறையில் முழுமையாகப்பயன்படுத்தி உயர்நிலைக்கு வளரவேண்டும்.

இவ்வாறு கூறினார் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ்.

அச்சுவேலி சமுர்த்தி வங்கி மண்டபத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் வலி.கிழக்கு சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி சுகந்தி குணசீலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

கல்விக்கு ஊடாகத்தான் முன்னேற முடியும்.

கல்வி வளர்ச்சியில் சமூக நிறுவனங்களீ வழங்கிவரும் உதவிகள் மாணவர்களால் உணரப்பட வேண்டும். அதனை உயர்நிலையில் முழுமையாகப் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

எமது பாரம்பரியமான சமூக விழுமியங்கள் சமூகத்தில் இல்லாமல் போய்விட்டன.

முதியவர்களைக் கனம்பண்ணல், மூத்தோர் சொற்கேட்டல் உள்ளிட்ட உயர் பண்புகளை சமூகத்தில் கண்டுகொள்ள முடியவில்லை. இழந்த சமூக விழுமியங்கள் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

சமூகத்தின் தவறுகளைக் காரணம் காட்டிக் கொண்டும் மற்றவர்கள் மீது பழியைச் சுமத்திய நிலையில் இருந்து கொண்டும் காலத்தை வீணடித்துக்கொள்ளக் கூடாது.

மாணவர் சமூகத்துக்கு இன்று பல்வேறு துறையினராலும் வழங்கப்பட்டு வரும் உதவிகள் கல்விக்காக அளிக்கப்படும் ஊக்குவிப்புக்கள் ''கல்வியில் வறுமை இல்லை'' என்ற ஒரு கருத்தை உருவாக்கி வருகின்றது. இதில் அர்த்தம் இல்லாமல் இல்லை.

எனவே மாணவர்கள் கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி ''ன்னேற வேண்டும் - எனக் கூறினார். (203-11)

# 'நிஷா'வால் பாதிக்கப்பட்டவீதி இன்னும் புனரமைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், செப். 8

வடலியடைப்பு அரசடிச் சந்தியில் இருந்து பறாளை செல்லும் வீதி கடந்த 'நிஷா' அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டது.

இந்த வீதி இதுவரை முழுமையாகப் புனரமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த வீதியில் ஏற்பட்ட சேதத்தை மண்போட்டுக் குழிகளை நிரவியுள்ள போதிலும் பருவமழை காலம் அண்மிப்பதனால் வீதியால் பயணிப்பவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் கூறப் படுகின்றது.

மேற்படி வீதியில் உள்ள மதகும் திருத்தப்படாமையால் பல பாதிப்புகள் ஏற்படும் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (204-112)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப். 8

தலையாழி இந்திரா சனசமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மென்பந்துச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டியாக இது நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டிக்கு விளையாட்டுக் கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களைத் தலையாழி இந்திரா விளையாட்டுக் கழகத்தில் பெற்று எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு மேற்படி விளையாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (201)

# குடும்பநல உத்தியோகத்தருக்கான பயிற்சிநெறி நேற்றுப் பண்ணையில் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், செப்.8

சுகாதார அமைச்சால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறிகள் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியவில் யாழ்.பண்ணையில் உள்ள பிராந்திய சுகாதார நிலையத்தில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மத்திய சுகாதார அமைச்சின் பொதுச்சுகாதார சேவைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் பி.ஜி.மகிபால, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஈ.ஞானசோதி, 'நிக்கொட்' நிறுவனத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன் மற்றும் காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டி.அல்விஸ், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்.தேவநேசன், தாய்-சேய்நல வைத்தியர் திருமகள் சிவசங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சுகாதார அமைச்சினால் அண்மையில் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 150 குடும்பநல உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட 150 கும்பநல உத்தியோகத்தர்களுக்கான ஆரம்பப் பயிற்சிநெறிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

ஒரு வருட தாதியர் பயிற்சிக் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியும், பிராந்திய சுகாதார வைத்திய பிரிவுகளில் ஆறுமாதங்களுக்கு வெளிக்களப் பயிற்சியும் வழங்கப்பட்ட பின்னர் நியமனம் செய்யப்படவுள்ளனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (9)

# இராமாவில் நலன்புரி நிலைய சிறார்களுக்குப் பசுப்பால்

யாழ்ப்பாணம், செப்.8

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திலுள்ள சுமார் 500 சிறார்களுக்குப் பசுப்பால் வழங்கப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் இச்சிறார்களுக்கு மாதத்தில் இரண்டு தடவை பசுப்பாலை வழங்கிவருகிறது. (203-236)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# 'பிடாஸ்' வாரத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

வலி.வடக்கு, செப்.8

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகில் இடம்பெற்று வரும் 'பிடாஸ்' வாரத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை 7.30 மணிக்கு மாணவர்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகளும் பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஆண்களுக்கான எல்லே, கிளித்தட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (203-86)

* * *

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் 'பிடாஸ்' வாரத்தையொட்டி நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆண்கள், பெண்களுக்கான போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* பெண்கள்:- யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் பட்டர்பிளை விளையாட்டுக்கழகம்.
* ஆண்கள்:- யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம். (203-86)

# நிலுவைகள் அளவைக்கு செயலகத்தில் முத்திரையிடல்

யாழ்ப்பாணம், செப்.8

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நிறுவைகள், அளவைகள், நிறுத்தல் கருவிகளுக்குீ முத்திரை இடும் பணி நேற்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் உள்ள வர்த்தகர்கள் மற்றும் இக் கருவிகளைப் பயப்படுத்துவோர் தவறாது இக் கருவிகளுக்கு முத்திரை இட்டுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட நிறுவைகள், அளவைகள் பகுதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

நேற்று ஆரம்பமான முத்திரை இடும் பணி தினமும் காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இப்பணி நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203-236)

# கூட்டுறவுநகர் அராலி தெற்கில் திறப்பு

சுழிபுரம், செப்.8

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கூட்டுறவுநகர் மூன்றாவது கிளை திறப்புவிழா நாளை புதன்கிழமை அராலி தெற்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டுறவு நகர்க் கிளையை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைக்கவுள்ளார். (203-111)




யாழ்.பல்கலைக்கழகத்தில் சுகநல நிலையத்தின் பிரிவை சித்த ஆயுர்வேத திணைக்களம் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தது.
யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மங்கள விளக்கேற்றுவதையும் ஆயுள்வேத திணைக்கள ஆணையாளர் திருமதி ராணி குணவர்த்தன நிலையத்தைத் திறந்து வைப்பதையும் கொரிய நாட்டு ஆயுள்வேத வைத்திய அதிகாரி திருமதி கஜோ இயன் ஹங் மற்றும் பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அன்னலெட்சுமி (சந்திராதேவி) திருச்செல்வம்

## (ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணம், சிவன்பண்னை வீதியைப் பிறப்பிடமாகவும் 16, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட அன்னலெட்சுமி திருச்செல்வம் (06.09.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைஐயா - கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஞானம் இம்மானுவல் - மேரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் ஈ.ஆர்.திருச்செல்வத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மாதவி மற்றும் ஜெயகாந்தன், முரளிதரன் (கண்ணன்), கீதா (மக்கள் வங்கி, திருநெல்வேலிக் கிளை), ஜெயமுகுந்தன் (செலான் வங்கி, யாழ்ப்பாணம்), ஜெயராகவன் (இலங்கை வங்கி, பொலநறுவை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தினி, துஷ்யந்தினி, கிளென்சியஸ் லொயலா (உரிமையாளர், லொயலாஸ்), தமயந்தி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) மற்றும் ராஜசூரியா- ஜெசீமா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற மாக்கிரட் ராணியின் மைத்துனியும் வைதேகி, காலஞ்சென்ற தேவகி மற்றும் லாவண்யா, லக்ஸ்மன், பிரியங்கா, வைஷ்ணவி, கோபிநாத், எறின் கிளென்சியா, பிரதீஷா ஆகியோரின் பேர்த்தியும் சின்னராசாவின் (கொழும்பு) உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (08.09.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, யாழ். மரியன்னைப் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
**ஈ.ஆர்.திருச்செல்வம்.**

இல.16, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(88661)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடலியடைப்பு புதறானை சித்தி விநாயகர் ஆலயத் தேர்த்திரு விழாவில் சுவாமி உள்வீதியுலா வருவதையும் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சரவணன்)

## கல்வயல் கிராமத்தின் வயல் விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.8

விவசாயத் திணைக்களத்தின் ''ஒரு பயிர் ஒரு கிராமம்'' திட்டத்தின் கீழ் கல்வயல் கிராமத்தின் வயல் விழா நிகழ்வுகள் கடந்த வாரம் விளைவேலி மருதடி விநாயகர் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

இக்கிராமத்தில் பாவல் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட 17 விவசாயிகளுக்கு இந்த நிகழ்வில் இரசாயன உரவகைகள், பூத்தல், காய்த்தல் ஆகியவற்றைத் தூண்டுவதற்கான பௌதிய ஊக்கி கொண்ட திரவப் பசளைகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் சு.விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடவிதான அலுவலர் தனபாலசிங்கம், கைதடி விவசாயப் போதனாசிரியர்ஆ.சிவபாலன், அம்பன் விவசாயப் போதனாசிரிர் வை.ஞானபாஸ்கரன் ஆகியோர் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளையும், விவ சாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு எவ்வகையில் தீர்வு காணலாம் எனவும் விள்க்கமளித்தனர். (203- 207)

## தென்னைச் செய்கையை ஊக்குவிக்க மானிய உதவித் திட்டங்கள் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், செப்.8

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின்கீழ் வடபிராந்திய தென்னைப் பயிர்ச் செய்கையால் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மானிய உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

புது நடுகை, மீள் நடுகை, கீழ் நடுகை மானியத் திட்டம் , போரினால் அழிவுற்ற தோட்டங்களை மறுசீரமைக்கும் மானியத் திட்டம், தென்னங்காணிகளில் ஊடு பயிற் செய்கை மானியத்திட்டம், தென்னையின் கீழ் கிளிரிசீடியா நடுகை மானியத் திட்டம், வீட்டுத் தோட்ட மானியத் திட்டம் போன்றன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட மானியத் திட்டங்களைப் பெறும் பயனாளிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

காணியின் விஸ்தீரணம் அரை ஏக்கரும் (8 பரப்பு) அதற்கு மேல் பத்து ஏக்கர் வரையான காணி இருத்தல் வேண்டும், ஒரே காணியாக இருத்தல் வேண்டும், காணியின் உரிமையை நிரூபிப்பதற்கான ஆவணத்தின் ஒரு போட்டோப் பிரதி வைத்திருத்தல் வேண்டும்.

தகைமையுடைய பயனாளிகள் வடபிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் ''பிராந்தியக் காரியாலயம், தென்னைப் பயிர்ச்செய்கை சபை, இலக்கம் 595/ 10, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை இல 595/10, நாவலர் வீதியில் அமைந்துள்ள வடபிராந்திய தென்னைப் பயிர்ச் செய்கை அலுவலகத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன், நல்லூர் கமநல சேவை நிலைய தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.ஜெயநாதன், புலோலி கமநல சேவை நிலைய தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தனிநாயகம் ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளமுடியும் என வடபிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கை சபை முகாமையாளர் வ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (201)

## இயற்கையுடன் சேர்ந்த வைத்தியம் ஆரோக்கியமான வாழ்வை மக்களுக்கு வழங்கும்

### ஆயுள்வேத திணைக்கள ஆணையாளர் உரை

நல்லூர், செப்.8

இயற்கையுடன் சேர்ந்த வைத்தியம் ஆரோக்கியமான வாழ்வை மக்களுக்கு வழங்கும்.

ஆயுள்வேத வைத்தியம் இயற்கையுடன் இணைந்தது. அதனை வளர்த்தெடுக்க வேண்டும். ஆயுள்வேதத் திணைக்கள ஆணையாளர் திருமதி ராணி குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆயுள்வேத திணைக்களத்தினால் சுகவாழ்வு நிலையம் கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆணையாளர் திருமதி ராணி குணவர்த்தன மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

வைத்தியசேவையின் நோக்கமே மக்களுக்கு அதனைச் சிறப்பாக வழங்க வேண்டும் என்பதே.

ஏற்கனவே பல்கலைக்கழகங்களில் ஆயுள்வேதத் திணைக்ள்ளத்தினால் சுகவாழ்வு நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இங்கும் இந்த நிலையத்தை அமைக்க வேண்டும் என ஏற்கனவே திட்டமிட்டிருந்த போதும் இன்றுதான் அது கைகூடுகின்றது.

இது பல்கலைக்கழகத்தில் அமையும் நான்காவது நிலையமாகும்.

எமது உணவே மருத்துவம் நிறைந்தது.

நாம் பயன்படுத்தும் மூலிகைகள் பல சித்த மருத்துவத்துடன் இணைந்தவையே.

ஆயுள்வேத மருத்துவத்துறை வளர்ச்சியடைய வேண்டும் என்பது தனது அடிமனதில் உள்ள எண்ணம்.அது நிறைவேற எல் லோரும் உதவ வேண்டும் - என்றார். (203-111)

## தமிழர் நிலங்களில் சிங்களக் குடியேற்றமா? அடியோடு மறுக்கின்றார் அமைச்சர் நிமால்!

கொழும்பு,செப்.8

யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் சொந்த நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் எவையும் மேற்கொள்ளப் படமாட்டா என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

முகாம்களில் அகதிகளாக வாழும் தமிழர்களின் சொந்த நிலங்கள் சிங்கள மக்களால் அபகரிக்கப்படலாம் என்கிற அச்சம் அடிப்படை அற்றது என்றும் அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

நேபாளத்தில் இடம் பெறவிருக்கும் சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருக்கும் இலங்கையின் சுகாதார மற்றும் போஷாக்குத் துறை அமைச்சர் நிமால் ஸ்ரீபால டீ சில்வா நேபாளத்துக்கு விஜயம் செய்ய முன்னர் இந்தியாவுக்கும் சென்றுள்ளார்.

அவர் அங்கு 'ஏசியன் ரிபியூன்' ஆங்கில இணையத்தளத்துக்கு, வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அகதிகளின் நிலைமை குறித்து வழங்கிய பேட்டியிலேயே இலங்கை அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யுத்தத்தால் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் எவையும் மேற்கொள்ளப்பட மாட்டா.

தமிழ் அகதிகளின் நிலங்கள் சிங்களவர்களால் அபகரிக்கப்படலாம் என்கிற அச்சம் அடிப்படை அற்றது. அண்மைய யுத்தத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மட்டுமன்றி, புலிகளால் யாழ்ப்பாணத்திலிருந்து மிக நீண்ட காலத்துக்கு முன்னர் துரத்தியடிக்கப்பட்டு புத்தளம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இன்றுவரை அகதிகளாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களும் தங்கள் தங்கள் சொந்த இடங்களில் விரைவில் மீள் குடியேற்றப்படுவார்கள்.

அகதிகளின் சொந்தப் பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணி வெடிகளை முற்றாக அகற்றிய பின்னரே அகதிகளை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்ற முடியும்.

இந்த இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடி பொருள்கள், தற்கொலை அங்கிகள்,ஆயுதங்கள் ஆகியவற்றைக் கண்டு பிடித்து அப்புறப்படுத்திய பிற்பாடே அகதிகளை மீள்குடியேற்ற முடியும் என்று சர்வதேச நிபுணர்கள் குழுவிடம் நாம் சிபாரிசு பெற வேண்டி இருக்கும். அகதிகள் பாதுகாப்பாக மீள்குடியேற்றப் படவேண்டும் என்பது அரசின் பிரதான இலட்சியமாக உள்ளது.

முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் அகதிகளின் சுகாதார மருத்துவ சேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. ஆனால், முகாம்களில் இலட்சக்கணக்கானோர் தங்க வைக்கப்படுவதால் அவர்கள் அனைவரினதும் சுகாதார மருத்துவ தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்து கொடுப்பது குறுகிய காலத்தில் சாத்தியமல்ல- என்றார். (சி)

## கல்வித்தரத்தை உறுதிசெய்ய மாகாண ரீதியாகப் பயிற்சி

யாழ்ப்பாணம், செப்.8

கல்வியின் தரத்தை உறுதிசெய்யும் பொருட்டு எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மாகாண ரீதியாக பயிற்சியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான வதிவிடச் செயலமர்வு எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் பத்திரமுல்ல, பெலவத்தையில் கல்வியமைச்சுக்கு அருகாமையில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கல்வியின் தரத்தை உறுதி செய்வதுடன் அவற்றைத் திறன் மிக்க தாக்குவது தொடர்பாகப் பயிற்றுவிக்கப்படும்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் இச்செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (203-236)



சங்கிலியன்தோப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் நடத்திய பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

செல்வி ஜெ.ரிசிக்கா, மாதர்சங்கத் தலைவி திருமதி புஸ்பமதி மன்மதராஜலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் [illegible] ஆகியோர் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு ஆனதுவோ உத்தமியே!



அன்னையின் மடியில் 12.08.1950

கயவர்களின் பிடியில்: 19.09.2008

## திருமதி

# கோசலாராணி திரிலோககாஃஸ்வரா

திதி: பஞ்சமி (08.09.2009)

ஆண்டொன்று உணர்விழந்து வாடுகின்றோம் உத்தமியே!
ஆறாத்துயர் எமக்களித்து பிரிந்துமேன் சென்றாய்?
பாசத்தின் உறைவிடமே! குடும்பத்தின் குலவிளக்கே!
உன் அன்புக்கு ஈடுண்டோ இவ்வுலகினிலே
கள்ளனவன் உருவில் வந்த காலனினால்
அழும்போதும் ஆறுதல் இன்றி தவிக்கின்றோம்
விடுகின்ற மூச்சென்ன, வடிக்கின்ற விழித்துளியென்ன
எல்லாமே உன் ஞாபகமாய் வருகின்றதே!
அவனியில் உம்மையாம் இனியென்று காண்போம்
தலைவனையும் ஏக புத்திரனையும் பரிதவிக்கவிட்டு
நீண்ட தூரம் பறந்து சென்றதேனோ?
உங்கள் உருவம் மறைந்து போனாலும்
உங்கள் உணர்வுகள் மறந்து போகாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
ஆ.திரிலோகாஃஸ்வரா (கணவர்),
தி.துவாரகன் (மகன்), குடும்பத்தினர்.

இல.24, புறாடிலேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை திறந்த பின்னும் தொடரும் பயண அவலங்கள்

'நாட்டின் எப்பிரதேசத்துக்கும் சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்யலாம்' என்பது இலங்கை உட்பட உலகின் அனைத்து நாடுகளிலும் வாழும் பிரஜைகளின் குடியியல் உரிமையாகும். ஆனால் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சுமார் 6½ லட்சம் பிரஜைகளுக்கு கட்டுப்பாடும் அவலமும் நிறைந்த போக்குவரத்தே சுமார் 3 வருடங்களுக்கும் மேலாகக் கிடைக்கின்றது.

2006ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுடனான ஒப்பந்தம் செல்லுபடியற்றதென அரசு அறிவிப்புச் செய்ததுடன் குடாநாட்டின் ஒரேயொரு தரைத்தொடர்பு வழியான ஏ-9 வீதி மூடப்பட்டது. அதன் பின்னர் யாழ்.மக்கள் பட்ட துன்பங்களும் - துயரங்களும் - உலகறிந்தவையே. ஆனால் தற்போது விடுதலைப்புலிகளுடனான போரை முழுமையாக வெற்றி கொண்டு விட்டோம் என்றும், தமிழ் மக்களும் நாட்டின் ஏனைய மக்களைப் போல் சுதந்திரத்துடனும் சமத்துவத்துடனும் வாழமுடியும் என்றும் அரசு கூறியது.

ஆனால் விடுதலைப்புலிகளின் பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றி வெற்றிபெற்றுவிட்டோம். ஆகையினால் யாழ்.மக்களின் சுதந்திரமான பயணத்துக்கு கட்டாயமானதாகும். சிவில் அதிகாரிகளால் அவர்கள் பயணிப்பதற்கு அனுமதி வழங்கும் பட்சத்திலேயே (கிளியறன்ஸ்) அவர்கள் பயணிக்க முடியும்.

இங்கு மக்கள் தொடர்பு அதிகாரிகளாகக் கடமையாற்றும் இராணுவ அதிகாரிகள் தமிழ்மொழி தெரியாத நிலையிலேயே கடமையாற்றுகிறார்கள். இதனால் மக்கள் தமது பிரச்சினைகளை அதிகாரிகளுக்குத் தெளிவாகக் கூறமுடியாது இருப்பதுடன் அவர்களுக்கும் மக்களின் பிரச்சினைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையும் உள்ளது. இதனால் அவர்களுடன் உரையாடுவதற்கு சிங்கள மொழி தெரிந்தவரை நாடவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

தமது அவசர அலுவல்கள் காரணமாக கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியவர்கள் கூட குறைந்தது ஒரு வார காலத்துக்கு முன்னர் தமது பயண அனுமதிப் படிவத்தை பூரணப்படுத்தி வழங்க வேண்டியநிலை உள்ளது. இதனால் அவர்கள் குறித்த காலத்துக்கு தமது வேலைகளை முடிக்கமுடியாத நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர்.

யாழிலிருந்து பயணிக்கும்போது வெயி பயணச் சீட்டு, யாழில் இருந்து செல்லும் போது பெறப்பட்ட பயண அனுமதிப்பத்திரம் (கிளியறன்ஸ்), தேசிய அடையாள அட்டை என்பவற்றின் போட்டோப் பிரதியைச் சமர்ப்பித்தல் அவசியமாகும். அங்கு போட்டோ பிரதி எடுப்பதற்காக ஒரேயொரு கடையே உள்ளது. இதனால் போட்டோ பிரதி எடுப்பதற்கும் மக்கள் வரிசையில் மணிக்கணக்காகக் காத்திருக்க வேண்டும்.

ரம்யா ஹவுஸின் அருகில் காலையிலிருந்து காத்துநிற்கும் மக்களுக்கு அங்குள்ள உணவகங்களில் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகளே கிடைக்கின்றது. அக்கடைகள்கூட தகரங்களால் அடைக்கப்பட்ட சிறு கடைகளே அங்கு உணவுப் பொருள்களின் விலையும் அதிகமாகவே உள்ளது.

வவுனியா பதிவு முகாமுக்கு அருகில் வாழ்கின்ற தமிழ் மக்கள்கூட இம்மக்களின் அவல - துன்ப - நிலைகளைப் புரிந்து கொள்ளாதவர்களாக உள்ளனர். இவர்கள் இம்மக்களைத் தமக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களாக எண்ணுகின்றனர். கொட்டும் மழையில் நிற்கமுடியாது அருகிலிருந்த அரச ஸ்தாபனத்தின் ஒரு பகுதியில் ஒதுங்கிய பொதுமக்களை அங்கிருந்த ஊழி

## மழையையும் வெயிலையும் எதிர்கொண்டு நாள் முழுவதும் தவமிருக்க வேண்டியநிலை

ஏ-9 வீதியைத் திறக்கப் போகின்றோம் என்று அரசும் யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி விஜயம் செய்த தென்னிலங்கை அரசியல் வாதிகளும் இழுத்தடிப்புச் செய்து வந்தனர்.

யாழ்.மாநகரசபைத் தேர்தலில் அரசும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மக்களுக்கு சுதந்திரமான, பாதுகாப்பான போக்குவரத்திற்கு ஏ-9 வீதியைத் திறப்போம் எனக் கூறி பாதைத் திறப்புப் படலத்தை நிறைவேற்றின. ஆனாலும் மக்களின் சுதந்திரமான பயணமென்பது இன்றும் கேள்விக் குறியாகவே உள்ளது எனலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு பயணிப்பவர்கள் யாழிலுள்ள சிவில் அலுவலகத்துக்குச் சென்று தம்மைப் பதிவு செய்யவேண்டும் என்பது லிலும் மழையிலும் கஷ்ரப்பட்டுச் செல்கின்ற மக்கள் மீண்டும் வரும்போதும் இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். வவுனியாவில் 'ரம்யா ஹவுஸ்' பதிவு முகாமில் தமது பதிவுகளையும் மீள் வருகையையும் உறுதிப்படுத்துவதற்காக வெயிலிலும் மழையிலும் தமது ஒருநாள் வாழ்வைக் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது.

பதிவு முகாமில் தமது பதிவுகளை உறுதிப்படுத்த காத்து நிற்கும் மக்களுக்கு 20 பேர் நிற்கக்கூடிய 2 சிறுகூடாரங்களே உள்ளன. எனினும் அக்கூடாரங்களில்கூட ஓய்வு எடுக்கமுடியாது மக்களுக்கு பதிவுச் சுமைகள் வேறு.

ஏ-9 வீதியினால் செல்லமுடியாது கப்பலில் பயணம் செய்தவர்கள் தமது கப்பல் யர்கள் நிற்கவிடாது ஏசிக்கலைத்த சம்பவங்களும் அங்கு நிறையவே உண்டு.

ஒருநாள் முழுவதையும் அங்கு கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்ட போதும் அக்குடிநீரில் குப்பைகளுக்கும் பஞ்சமில்லை, தவிர மக்களின் அவசியத் தேவைகளுக்கான கழிப்பிட வசதிகள்கூட அங்கு இல்லாததால் மக்கள் பெரும்துன்பங்களை எதிர்நோக்குகின்றனர். இச்சமயத்தில் உதவுவதற்கு அருகில் வசிக்கும் மக்கள்கூட முன்வராதவர்களாகவே உள்ளனர்.

தமது பதிவுகளையும் மீள்வருகையையும் உறுதிப்படுத்துவதற்கு மணிக்கணக்காக நீண்ட வரிசையில் கொட்டும் மழையிலும் கொளுத்தும் வெயிலிலும் காத்து நிற்கும் மக்கள் மூன்று தடவைகள் தமது பதிவுகளை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் இம்மக்களின் பதிவுகளை உறுதிப்படுத்த இரண்டு பொலிசாரும் 400 பயணிகளின் உடைமைகளைப் பரிசோதனை செய்வதற்கும் 2 பொலிஸாரே கடமையாற்றுகின்றனர் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தமது பதிவுகளை உறுதிப்படுத்த காலை 5 மணி முதலே வரிசையில் காவலிருக்கும் மக்களுக்கு 400 பேரே பயணிக்க முடியும் என்ற மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையும் யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியினால் பயணம் செய்தவர்களுக்கே திரும்பும்போது முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இதனால் கப்பல், விமானம் மூலம் பயணித்தவர்கள் ஏ-9 வீதியூடாகப் பயணிக்க மீண்டும் மறுநாள் பதிவு செய்ய வரவேண்டும். இதனால் பலர் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதுடன் அங்கு தங்குவதற்கான தங்குமிடங்களைத் தேடி அலைய வேண்டியும் உள்ளது. வசதிக்குறைவான தங்குமிடங்களுக்கும் அதிகளவான கட்டணத்தை வழங்கவேண்டியும் உள்ளது. தவிர மீண்டும் பதிவு முகாம் நோக்கி வருவதற்கு ஆட்டோவுக்கு 200 ரூபாவுக்கும் அதிகமான பணத்தைச் செலவிட வேண்டியும் உள்ளது.

காலை 3 மணி முதல் காத்திருக்கும் மக்கள் மாலை 5.30 மணியளவில் பஸ்களில் ஏற்றப்பட்டு சுமார் ஒன்றரை மணிநேரம் பஸ்ஸினுள்ளேயே காத்திருக்க வேண்டிய துர்ப் பாக்கியநிலையும் உள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு 425 ரூபா கட்டணம் என நிர்ணயிக்கப்பட்டபோதும் அக்கட்டணம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 8 பஸ்களுக்கே உரியதாகும். 400 பேருக்கு பயண அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் பயணிகள் 950 ரூபா செலுத்தி சொகுசு பஸ்களிலும் பயணிக்க வேண்டும் என்ற கட்டாய நிலையும் உள்ளது.

நீண்டநேர காத்திருப்பில் கழியும் இம்மக்களின் வாழ்வு பஸ்களில் ஏற்றப்பட்ட பின்னரும் இரவு 7 மணிக்கு அவை தமது யாழ்.நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கும். நான்கு மணித்தியாலங்கள் பயணித்து ஊரடங்கு வேளையில் இங்கு வந்து இறங்கும் மக்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டபோதும் அந்த பஸ்கள் போக்குவரத்து பாதை ஒழுங்கிலேயே பயணிப்பதால் வீடுகள் தூரத்திலிருப்பதாலும் பொருள் சுமையுடன் வருவதாலும் வழமையைவிட இருமடங்கு அதிகமாகக் கட்டணத்தை வழங்கி ஆட்டோவில் பயணிக்க வேண்டியுள்ளது.

சுதந்திரமான போக்குவரத்தை மக்களுக்கு வழங்குகிறோம் என அரசியல்வாதிகள் கூறுகின்றபோதும் ஏ-9 வீதியால் பயணித்த மக்களுக்கு இந்தத் துன்பகரமான பயணத்தின் வலி தெரியும். இந்நிலை மாறி எம்மக்களுக்கு என்றுதான் சுதந்திரமான பயணம் அமையுமோ என்பதைக் காலமே பதில் சொல்ல வேண்டும். ✱

தமிழரசன்

## 'யுனிசெவ்' பேச்சாளருக்கு விசா மறுப்பு; இலங்கையிடம் விளக்கம் கோர முடிவு

கொழும்பு, செப்.8

'யுனிசெவ்' அமைப்பின் இலங்கைக்கான பேச்சாளர் ஜேம்ஸ் எல்டெர் இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்பட்டமை தொடர்பாக அரசிடம் மேலதிக விளக்கங்களைக் கோரவுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜேம்ஸ் எல்டெரின் விசா மறுக்கப்பட்டமை குறித்து மேலதிக விளக்கம் கோரப்படவுள்ளது என யுனிசெவ்வின் பிராந்தியத் தொடர்பாடல் அதிகாரி சாராகுரே புதுடில்லியிலிருந்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

''இலங்கையில் மிக மோசமான நிலையில் உள்ள பெண்கள் - குழந்தைகள் சார்பில் பக்கசார்பின்றிச் செயற்படுவதற்கு எமது பேச்சாளருக்கு அனுமதி வழங்கப்படவேண்டுமென நாங்கள் உறுதியாக விரும்புகிறோம்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''இலங்கையில் குரலற்றவர்களுக்காக, சிறுவர்கள் மற்றும் மோசமாகப் பாதிக்கப்படடவர்களுக்காக யுனிசெவ்வின் குரலாக ஜேம்ஸ் எல்டெர் செயற்பட்டு வந்தார்'' என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெவ்) இலங்கைக்கான தொடர்பாடல் அதிகாரியும் இராஜதந்திர அந்தஸ்துள்ளவருமான ஜேம்ஸ் எல்டெர் இலங்கையிலிருந்து நாடுகடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதுகுறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ள ஐ.நா. அதிகாரிகள் இதுகுறித்து ஐ.நா.செயலாளர் நாயகத்திடம் தாங்கள் முறையிடப் போகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

அடுத்த வருடம் ஜூலைமாதம் வரை இலங்கையில் தங்கியிருந்து பணியாற்றுவதற்கான விசா ஜேம்ஸ் எல்டெரின் இருந்தபோதிலும் அவர் வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட இராஜதந்திர அந்தஸ்துள்ள முதலாவது ஐ.நா. அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேம்ஸ் எல்டெரின் வெளியேற்றத்திற்கான காரணத்தை இலங்கை அரசு இதுவரை தெரிவிக்கவில்லை என ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், தம்மை இனங்காட்ட விரும்பாத வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் நிலை தொடர்பாக குறிப்பாக சிறுவர்களின் நிலை பற்றி எல்டெர் வெளியிட்ட கருத்துகள் காரணமாக அரசு அதிருப்தி கொண்டிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

விசா முடிவடைந்ததன் காரணமாகவே இவர் வெளியேற்றப்பட்டார் என வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் பாலித கோஹன தெரிவித்திருந்தார்.

''அவர் வெளியேற்றப்படவில்லை. குடிவரவு அதிகாரிகள் விசா முடிந்த ஒருவரின் விடயத்தில் பின்பற்றப்படவேண்டிய வழமையான நடவடிக்கைகளையே எடுத்துள்ளனர்'' என கோஹன குறிப்பிட்டிருந்தார். (அ-சி)

## யுத்த காலத்தைவிட இப்போதே பொருள்விலை அதிகரித்துள்ளது; வரிகளை நீக்கக் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, செப்.8

தற்போது இந்நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. எல்லாப் பொருள்களுக்கும் வரி அதிகரிக்கப்பட்டு அவை இந்நாட்டு மக்களின் முதுகில் சுமத்தப்பட்டுள்ளன. யுத்த காலத்தில் இருந்ததைவிடவும் இப்போதுதான் பொருள்களின் விலைகள் அதிகமாகவுள்ளன.

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கும் பொருள்களின் தேவையற்ற வரிகளை நீக்குவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்த காலத்தை விடவும் இப்போதே பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்றும் அக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் எம்.பியுமான கயந்த கருணாதிலகவே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிந்ததும் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், அரசு மக்களை ஏமாற்றிவிட்டது. யுத்த காலத்தின் போது விலைவாசியைப் பொறுத்துக்கொண்டு மக்கள் யுத்தத்துக்காக அதிக தியாகம் செய்தனர். ஆனால், அரச அமைச்சர்களோ மக்களின் பணத்தை வீண்விரயம் செய்தனர்.

அரசு பொருட்களின் மீது விதித்திருக்கும் தேவையற்ற வரிகளை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மறுபுறம் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி இப்போது போராட்டத்தை ஆரம்பித்து விட்டனர். அரச ஊழியர்களும் தனியார்துறை ஊழியர்களும் இதே சம்பளப் பிரச்சினையை எதிர் கொண்டுள்ளனர்.

யுத்தம் முடிந்துள்ள நிலையில் அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோரின் சம்பளத்தை அதிகரிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களைப் பற்றிச் சிறிதும் கணக்கில் எடுக்காது தான்தோன்றித்தனமாகச் செயற்படும் இந்த அரசுக்கு இந்நாட்டு மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவர். எதிர்வரும் தென் மாகாணசபைத் தேர்தலில் மக்கள் நிச்சயம் அரசுக்குத் தக்கபாடம் ஒன்றைப் புகட்ட வேண்டும் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய இடத்துக்கு மின்மாற்றி

சுழிபுரம் இராணுவ காவலரணுக்கு-அருகாமையில் நிறுவப்பட்ட மின்மாற்றி மீண்டும் பழைய இடமான சுழிபுரம், காளுவன் சந்திக்கு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது.

சுழிப்புரம் மேற்கு பகுதி மக்களுக்கு மின்சாரம் பாதிக்கப்பட்டதனால் அப்பகுதி மக்கள் மின்சார சபைக்கு தெரிவித்த வேண்டுகோளின் பிரகாரமே பழைய இடத்துக்கு மின்மாற்றி மாற்றப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் சீரான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-28)

## இன்றைய ஆட்டங்கள்

ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகம் வலிகாமம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* வடமராட்சி கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.

(203-86)

## வடலியடைப்பு விவசாயிகளுக்கு உரம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.8

வடலியடைப்பு விவசாய சம்மேளனம் தனது பகுதியில் நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு மானிய உரத்தைப் பெற்றுக்கொடுக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

மேற்படி சம்மேளனப் பகுதியில் வேறு கிராம சேவகர்கள் பிரிவில் உள்ள விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொண்டால் தமது பிரிவு விவசாய சம்மேளனத்திடம் இருந்து இந்தக் காணிக்கான உரத்தைப் பெறவில்லை என்பதனை உறுதிப்படுத்திய ஆவணம் சமர்ப்பித்தே உரத்திற்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-112)

### விண்ணக வாழ்வில் மூன்றாண்டு நிறைவு

அன்னை மடியில் 14 * 04 * 1931



ஆண்டவன் அடியில் 08 * 09 * 2006

**திருமதி வெண்டக்கோன் இராசமலர் (லில்லி)**

ஆருயிர் தந்தெமை அரவணைத்து
பாசமலராய் எமை வளர்த்தெடுத்து
பாரினுக்கு நல்மலராயெமை உயர்த்திவிட்டு
பாதியில் பரிதவிக்க விட்டுச் சென்றீரே
மூன்றாண்டும் வந்தாச்சோ உம் முகமதைப்
பார்ப்பதற்கு எங்கு நாம் தேடுவோம்
பசுமையான நினைவது பகலிலும்
வருகின்றதே அம்மாவே!.....அம்மம்மாவே...

என்றும் உன் நினைவுடன்:
தாய், மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

466/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(88632)

### 55ஆவது பிறந்த தினமும் இரண்டாம் ஆண்டு நினைவு நாளும்



**அமரர் சின்னத்துரை சிவபாதம் A.I.B**

(வாடிக்கையாளர்சேவை முகாமையாளர், இலங்கை வங்கி 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்)

தோற்றம் 08.09.1954 மறைவு 01.09.2007

திதி: சங்கடஹர சதுர்த்தி (08.09.2009)

வெங் கொடுமை சாகாட்டின் வேதனை
மண்ணுலக மாந்தர் யாவர்க்கும் எளிதோ
கருவின் உயிராகி கதியில் விதியான
வித்தகன் சிவபாதம் ஜெனித்த நாள் இதுவோ!
பந்தமகற்றி பரலோகம் சென்று பதியடியில் கலந்து
ஆண்டிரண்டானாலும் சிந்தையில் அகம் புகுந்து
உம் ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம் இறைவனையே

என்றும் உங்கள் நினைவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.26(10), வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(88608)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கண்மகிழ 05.05.1953 நெஞ்சம் நெகிழ 10.08.2009



**திருமதி ஜெகதாம்பிகை ஆறுமுகானந்தன்**

கடந்த 10.08.2009 அன்று அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு எம் துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் மற்றும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் துயரம் தெரிவித்தோருக்கும் மரணச் சடங்கிலிருந்து இறுதி ஊர்வலம் வரை கலந்து கொண்டோருக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை அவரைக் காப்பாற்ற அரும்பாடுபட்ட பெரும் மதிப்புக்குரிய வைத்தியர்கள் மற்றும் உதவி மருத்துவ, தாதிமார் அனைவருக்கும் நன்றிகூறி சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி நாளை (09.09.2009) புதன்கிழமை காலை ஊறணி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:- அன்புள்ளம் கொண்ட அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.**

சந்தை வீதி, இமையாணன்,
உடுப்பிட்டி.

(88647)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மர்ஹபா' நிறுவனத்தின் உற்பத்திகள் இயற்கை எழிலின் தூய்மை மிகு சாரம்

மர்ஹபா நிறுவனமானது GMP மற்றும் ISO 9001:2001 தரச்சான்றிதழ்களைப் பெற்ற பாகிஸ்தானில் இயற்கை உற்பத்திகளுக்கு முன்னணி வகிக்கும் பிரசித்தி பெற்ற ஒரு நிறுவனமாகும். பல்வேறு பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் பரிசோதனை கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட விசேட தயாரிப்பு முறைக்கமைய நவீன இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆயுள் வேத ஔடதங்கள், வாசனைத் திரவியங்கள், உணவு வகை மற்றும் பல்வேறுபட்ட ஔடதப் பொருள்களை உற்பத்தி செய்வ தில் இந்நிறுவனம் பிரசித்திபெற்று விளங்குகின்ற தென்றால் அது மிகையாகாது. 'மர்ஹபா' என்பது பாகிஸ்தான் மொழியில் 'வணக்கம்' என்ற அதியுயர் பொருளுக்கமைய இருப்பதால் இவ்வுற்பத்திகளும் அப்பொருளுக்கேற்ப அங்கு பிரசித்திபெற்று விளங்குகின்றன.

### மர்ஹபா பன்னீர் *(Rose Water)*

சுத்தமான ரோஜாப் பூக்களிலிருந்து அதன் தரம் குறையாமல் மிகவும்பக்குவமாக வடித்தெடுக்கப்பட்டது.

### தொழிற்பாடுகள்

மலச்சிக்கலை நிவர்த்தி செய்யும், தொற்று நீக்கியாகவும் செயற்படும். ஒப்பனையை அகற்ற சிறந்த வழி.கண் எரிச்சல், கண் சிவத்தல் மற்றும் கண் வீங்குதலைக் குணப்படுத்த மிக வும் உகந்தது. உணவுக்கு மேலதிக சுவையூட்டி. முகம் மற்றும் உடலுக்குப் பூசுவதன் மூலம் புத்துணர்ச்சியையும் சுத்தத்தையும் தரும்.

### மர்ஹபா தேன் *(Honey)*

தரம் வாய்ந்தது. மற்றும் மிகவும் சுத்தமானது என்பதனாலேயே மர்ஹபா தேன் அந்நாட்டில் மிகவும் பிரசித்திபெற்று விளங்குகின்றது. நிறைவானதும், சக்திமிக்க ஆகாரமான மர்ஹபா தேனை ஔடதமாக வும் உணவை சுவையூட்டவும், அழகு, ஒப்பனைப் பொருளாகவும், சக்தியைத் தரக்கூடிய பானமாகவும் உபயோகிக்கலாம். மனித உடலுக்கு மிக முக்கிய உணவாகத் தேனை உட்கொள்ளலாம் என்பது அநேகர் அறிந்த உண்மையே. ஆனாலும் அதில் அடங்கியுள்ள முக்கிய குணாம்சங்கள் அதிகமானவர்களுக்குத் தெரிவதில்லை.

ஒவ்வொரு வீட்டிலும், முக்கியமாக சிறுவர்கள் இருக்கும் ஒவ்வொரு வீடுகளிலும் இருக்கவேண்டிய ஒரு நோய் நிவாரண ஔடதமாகும்.

### தொழிற்பாடுகள்

மனித உடலில் இழந்த சக்தியை மீளப் பெறவும் நாடி, நரம்புகளுக்கு மீள்சக்தி வழங்கும் குணமுடைய சக்திமிக்க ஒரு ஔடதமாகும். பல்வேறுபட்ட நோய்களுக்கும் உபயோகிக்கக்கூடிய ஒரு நோய் நிவாரணி. உணவுச் சமிபாட்டைச் சீர்ப்படுத்தும். தடிமன், இருமல் போன்ற நோய்களுக்கு நிவாரணம் வழங்கும். ஒவ்வாமைக்கு (Allergy) குணமளிக்கும். தொண்டை வலி, தொண்டைச் சளியைச் சீர்ப்படுத்திக் குரலுக்கு, இனிமை அளிக்கின்றது.நாட்டு வைத்திய முறையில் தயாரிக் கப்படும் ஒவ்வொரு ஔடதத்திலும் சேர்க்கப்படும் மாற்றீடாகும்.உடல் பருமனைக் குறைக்கவும் உதவும்.

மர்ஹபா இஸ்பஹோல் ஹஸ்க் (Isphagol Husk) Plantago Ovata என்ற பெயரில் அழைக்கப்படும் ஒரு தாவர வகையின் பழங்களிலிருந்து பெறப்படும் இந்த மாப்பொருளற்ற இயற்கை மூலப்பொருள் காபோஹைறேட் நாராகும். (Fiber)

மலச்சிக்கலை நீக்க சிறந்த நிவாரணி, வயிற்றிலும் குதத்திலும் ஏற்படும் அசுத்தங்களை அகற்றி நிவாரணமளிக்கும், உணவு சமிபாட்டை சீர்படுத்தி உடலில் தேவையற்ற சீனி, கொழுப்பு சேர்வதைத் தடுக்கும். இதன் மூலம் உடலில் சேரும் கலோரிப் (Calorie) பெறுமானத்தைக் குறைத்து உடல் பருமனடைதலையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்த உதவும். 2 தேக்கரண்டிகள் ஒரு நாளுக்கு 2-3 தடவை வரை நீரில் அல்லது பாலில் கலந்து பருகலாம்.

### மர்ஹபா எக்னி க்ளீன் *(Acne Clean)*

பருக்கள் மற்றும் கரும்புள்ளிகளுக்கு ஒரு சிறந்த நிவாரணி, பருக்கள் கரும் புள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கற் றாளை போன்ற இயற்கை மூலப்பொருள்கள் சேர்த்து விசேட செயல்முறையில் உற்பத்திசெய்யப்பட்ட ஒரு கலவை. எந்தவொரு வயதெல்லைக்குட்பட்டவர்களதும் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை குறைப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

### தொழிற்பாடுகள்

பருக்கள், கரும்புள்ளிகளை அகற்றும், சருமத்தின் எண்ணெய்த் தன்மையை உறுஞ்சி சருமத்தின் மேற்பகுதியை சுத்த மாக வைத்திருக்கும். இதன்மூலம் சருமத் தில் பருக்கள், கரும்புள்ளி ஏற்படும் தன்மையைக் குறைக்கும், தழும்பு, வெட்டுக் காயம், சிறுகாயங்கள் மற்றும் பாதத்தில் ஏற்படும் வெடிப்பு ஆகியவற்றை குணப் படுத்த உகந்தது.

பருக்கள், கரும்புள்ளி இருக்கும் பகுதிகளை சுத்தம்செய்து நாளொன்றிற்கு இரண்டு தடவைகள் பூசவும்.

### மர்ஹபா பாதாம் எண்ணெய் *(Almond Oil)*

விற்றமின் E அடங்கிய பாதாம் எண்ணெய் மசாஜ் செய்ய மிகவும் உகந்தது. அதே வேளை அழகுக் கலையிலும் அதிகளவு பாவிக்கப்படுகின்றது.

### தொழிற்பாடுகள்

தலைக்கு மசாஜ் செய்யும்போது மனதை ஆறுதல்படுத்தி மன அழுத்தத்தை குறைக்கும். சுகமான தூக்கத்திற்கு இது வழி வகுக்கும். மசாஜ் செய்வதினால் தசைகளுக்கு சக்தியளிக்கும். வயிற்றின் செயற்பாடுகளைச் சீர்செய்து வயிறு காய்வதைத் தடுக்கும், தினமும் பாதாம் எண்ணை சிறிதளை வைப் பூசுவதன் மூலம் கண்களின் கீழ் பகுதியில் ஏற்படும் கருவளயத்தை அகற்ற உதவும். சமயலுக்கும் பாவிக்கலாம்.

### மர்ஹபா ஆமணக்கு எண்ணெய் (Castor Oil)

ஔடத குணமடங்கிய இயற்கை ஆமணக்கு எண்ணெயை புராதன காலம் தொட்டு இன்றுவரை நோய் நிவாரணி யாக மனிதர்கள் பாவித்து வருகின்றார்கள்.

### தொழிற்பாடுகள்

மிகவும் பாதுகாப்பான மலச்சிக்கல் நிவாரணி, வயிற்றுவலி மற்றும் வயிறு காய்தலைக் குறைக்கும், வயிற்றுக்குள் செல்லும் நச்சுப்பொருள்கள் மற்றும் அமிலப் பதார்த்தங்களை அகற்ற பெரிதும் உதவும், சருமத்தில் ஏற்படும் சீழ் உரு வாகுதல், கீறுகள், அதிக வெய்யிலினால் தோல் உபாதைக்கு உள்ளாதல், வீக்கம் மற்றும் மேலோட்டமாக உள்ள காயங்களுக்குப் பூசுவதன் மூலம் நிவாரணம் பெறலாம். தலைக்கு வைக்கும் எண்ணையுடன் கலந்து தலைக்குப் பூசுவதன் மூலம் தலைமுடிக்கு பளபளப்பைக் கொடுக்கும். ✱

## ளம்பர வி வரணம்

# யாழ்ப்பாணத்தில் கால் பதிக்கிறது டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் (DPMC) நிறுவனமானது, பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் பஜாஜ் முச் சக்கர வண்டிகளின் இலங்கையின் ஏக விற்பனை முகவராகும். இதன் மிகப் பெரிய வளர்ச்சியின் அடுத்தபடியாக இலங்கை யின் வடபகுதி தலைநகரத்திலும் புதிய அறிமுகமான இதன் முதலாவது விற்பனைக் காரியாலயத்தை யாழ்ப்பாணத்தில் திறக்க வுள்ளது. இதன் மூலம் இப்பிராந்தியத்தின் பஜாஜ் வாடிக்கையாளர்களின் தேவைகளைச் சந்திக்க முடியும். பஜாஜ் மோட்டார் சைக்கிளானது இலங்கையில் அதிசிறந்த கூடுதலான விற்பனையாகும் வாகனமாகும். மற்றும் பஜாஜ் முச்சக்கர வண்டியானது இந்நாட்டின் முதல்தர குடும்ப வாகனமாகும். யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே பஜாஜ் வாகனங்கள் உள்ளன. ஆனாலும் முதல் தடவையாக டி.பி.எம்.சி. நிறுவனம் யாழ்.பிராந்தியத்தில் நேரடியாக தமது வியா பாரச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. முதலீடுகள் இப்பொழுது புதிய பகுதிகளை நோக்கி இறங்கியுள்ளது. புதிய விற்பனைக் காரியாலயம் திட்டமிடப்பட்டபடி செப்டெம்பர் மாதம் 9 திகதி திறந்து வைக் கப்படும்.

இதன்மூலம் யாழ் மக்களுக்கு எரிபொருள் சிக்கனமுடைய, செலவு குறைந்த மற்றும் வசதியான போக்குவரத்து வாகனத்தைப் பெற்றகொள்ளமுடியும். இது நாளாந்தத் தேவைகளுக்கு மிகவும் சிறப்பானதொன்றாகும். முச்சக்கர வண்டித் தொழிலானது இளம் பரம்பரைக்கு ஒரு சுய தொழில் வாய்ப் பாகவும் அமைகிறது. மற்றும் சில குடும்பங்கள் இதன் வருமானத்தில் தங்கியிருக்கின்றன. குறிப்பிட்ட நபர்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டு விற்பனை முகவராக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலதிக செயற்பாடுகள் விற்பனைக் காரியாலயத்தின் ஊடாக நடைபெறும். நிறுவனமானது இப் பிராந்தியத்தில் சேவை முகவர்கள் மற்றும் உதிரிப்பாக விற்பனை முகவர்களின் வலைப்பின்னலை அதிகரித்து தனது எல்லையை விரிவாக்கவுள்ளது. இத்துடன் இந்த நிறுவனமானது பெறுமதி வாய்ந்த யாழ்ப்பாண வாடிக்கையாளர்களுக்கு நம்ப முடியாத அளவு விற்பனைக்கு பிந்திய சேவையை வழங்க அர்ப்பணித்துள்ளது. டி.பி.எம்.சி நிறுவனம் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்க இருக்கிறது. அதன்படி பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியின் திருத்த வேலை மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றி யாழ்ப்பாணம் தொழில் பயிற்சி அதிகார சபைக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை நிறுவனத்தின் தொழில்நுட்ப கலைக்கூடமான பண்டாரகமவில் வழங்கவுள்ளது. பயிற்சியின்பின் அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து தமது பிரதேசத்தில் உள்ள வேலை அற்ற இளைஞர்களுக்கும் மற்றும் பாடசாலையில் இருந்து வெளியேறிய மாணவர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் திருத்தியமைக்கும் நிலையங்கள் மற்றும் பராமரிப்புச் சேவை நிலையங்கள் யாழ். பிராந்தியம் முழுவதும் நிறுவ முடியும். இதன்மூலம் வாலிபர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பும் அத்துடன் விற்பனைக்குப் பிந்திய நல்ல சேவையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கமுடியும். ✱

# கணனிக் கல்வி கற்க கால தாமதம் எதற்கு? அதனை இப்பொழுதே ஆரம்பிப்போம்!

தகவல் குழுமத்தின் கல்விக்கரமாக விளங்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனமான ஐ.ஐ.ரி. 'கல்வி வாழ்வின் முதலீடு' எனும் கருத்தில் உறுதியான நம்பிக்கையைக் கொண்டுள்ளது. எனவே இங்கு பிள்ளைகளுக்கு இளமையிலே கணனிக் கல்வி ஆரம்பிக்கப்படுகின்றது. பின்னர் பிள்ளைகள் படிப்படியாக அறிவில் முன்னேற்றமடைந்து டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள், உயர் டிப்ளோமாக்கள், பட்டங்கள், உயர்பட்டங்கள் என்பவற்றைப் பெற்றிட வகை செய்கின்றது. சிறார்களுக்கு கணனிக் கல்வி அளிக்கும் பொருட்டு ஐ.ஐ.ரி கிளைகள் கொழும்பிலும் கண்டியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவை பிரபல்யம் பெற்று விளங்குவதுடன் நூற்றுக்கணக்கான சிறார்கள் கணனி அறிவு பெற்றுப்பயன்பெற உ தவுகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான பாடசாலைக்கு நாம் விஜயம் செய்தபோதும் தொடர்ந்தும் பெற்றோருடனான சந்திப்பின் போதும் அங்கு எமக்கு அபரிவிதமான ஆதரவு கிடைத்தது. யாழ்மக்களிடையே கணனிக் கல்விசார் விழிப்புணர்வு நிறையவே ஏற்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையை ஐ.ஐ.ரி நிறுவியுள்ளது.

'வருங்காலக் குழந்தைகள்' எனும் கருப்பொருளை மையமாகக்கொண்ட குழந்தைகளுக்கான கணனி கல்விமுறை ஐக்கிய அமெரிக்காவில் தோற்றம் கண்டது. 1998 ஆம் ஆண்டளவில் இக்கோட்பாடு இலங்கைக்குப் பரவியது. 4 முதல் 17 வயது வரையிலான பிள்ளைகளுக்கு கணனிக் கல்வி அளிப்பதே இக்கோட்பாட்டின் செயற்திட்ட வடிவமாகும். மேலும் இத்திட்டம் இலங்கை மக்களின் வருமான வளத்திற்கு ஏற்றவாறு செயற்படுத்தப்பட்டு வருவது விஷேட அம்சமாகும். பாடசாலை நாள்களிலும் வார இறுதி நாள்களிலும் பாடசாலை தவிர்ந்த ஏனை நேர அட்டவணைக்குப் பொருத்தமான முறையில் கற்கைக் காலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'பாடசாலைக் கருவிப் பயன்பாட்டுத் திட்டம்' என்பது ஐ.ஐ.ரி யினால் உருவாக்கப்பட்ட தனித்துவமான கணனிக் கலைத்திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் வெவ்வேறு வயதுப் பிள்ளைகள் பாடசாலை மட்டத்திலும் பாடசாலைக்கு வெளியேயும் கணனி அறிவினைப் பெற்றிட முடியும். ஐ.ஐ.ரி யின் பல்வேறு அம்சங்களை இத்திட்டம் கவனத்தில் கொண்டுள்ளது. மென்பொருள், கணனி மொழி, தரவுக்கோர்வை, இன்ரநெற், ஈமெயில் போன்ற அம்சங்கள் இக்கலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆண்டு 1 முதல் 13 வரையில் கல்வி கற்போருக்கு உகந்த இந்தத்திட்டத்தின் மூலம் பிள்ளைகளின் கணனி சார் அறிவு மட்டுமின்றி ஆய்வுத் திறன், ஆராய்ச்சித் திறன், திட்ட அறிமுகத் திறன் என்பன மேம்படுத்தப்படுகின்றன. குழுமட்டத்தில் குறித்தகால எல்லைக்குள் பூரணப்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் வழங்கப்படுவதனால் காலக் கணிப்புக்கு ஏற்பவும் குழுவாகவும் செயற்படும் திறமை ஊக்குவிக்கப்படுகின்றது. பாடசாலைக் கல்வித் திட்டம் ஐ.ஐ.ரியின் எதிர்காலத்திட்டங்களுக்கு ஏற்ப பகுத்தாய்வு செய்யப்படுவதால் மாணவர்களது கணனி அறிவுக்கு உறுதியான அடித்தளமாக அமைகின்றது. இத்திட்டம் கண்டியிலும் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்த ஐ.ஐ.ரி ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இது தரம் 1 முதல் 13 வரையில் கற்பிக்கும் பிள்ளைகளுக்கு உகந்தது. ஆண்டு 1 முதல் 9 வரை ஐ.ஐ.ரியின் கலைத் திட்டங்களும் 10 ஆம் 11 ஆம் தரங்களில் ஐ.ஐ.ரி, ஜி.சீ.ஈ. சாதாரண கலைத் திட்டமும் அறிமுகப்படுத்தப்படும் கணனிசார் கோட்பாடுகள், செயல்முறை ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆண்டு 6 இல் இப்பயிற்சியை ஆரம்பிக்கும் பிள்ளை கிரமமான முறையில் இதனைத் தொடருமானால் ஆண்டு 10 ஐ எட்டும்போது கற்றல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடாது. தொடர்ந்து ஆண்டு 13 வரை இச் செயற்திட்டத்தால் நன்மை பெறலாம். குழுமத்தின் ஐ.ஐ.ரி கிளையின் செயற்பாடுகளில் இணைந்து யாழ்.மாணவர்கள் நன்மை பல பெற்றிட வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐ.ஐ.ரி நிறுவனக் கிளையின் ஆலோசகராகவும் செயற்திட்ட இணைப்பாளராகவும் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் செயற்படுகின்றார். 182, பிறவுண் வீதியில் அமைந்துள்ள இந் நிறுவனத்திற்கு செப்ரெம்பரர் 2 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை கொழும்பு தலைமைச் செயலகத்திலிருந்து வளவாளர்களை வரவழைத்து பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள், மற்றும் கணனி வளவாளர்கள் ஆகியோரை சந்திக்க உள்ளார்கள். அவர்களை சந்தித்து கலந்துரையாடி யாழ்.மாணவர்களது கணனி அறிவை மேம்படுத்த உதவுமாறு கல்வியாளர்களை வேண்டுகின்றோம். ✱

# Affiliated University College

## 58வது கிளை புதுப்பொலிவுடன் சாவகச்சேரியில்...

1981இல் இருந்து கடந்த மூன்று தசாப்தங்களாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சி நெறிகளை வெற்றிகரமாக வழங்கி வரும் IDM இன் பிரதான வளாகங்களில் ஒன்றாக சாவகச்சேரியில் தனது 58வது கிளையினை 'மிகப்பிரம்மாண்டமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் நவீன STATE OF ART TECHNOLOGY வசதியுடன் கூடிய முழுமையானதொரு கட்டமைப்பாக தடம் பதிக்கவிருக்கின்றது.

பாலர் கல்வி முதல் பட்டப்பின் (Post Graduation) பாடநெறிகள் வரை பல் வேறு உயர்கல்வி பரிமாணங்களில் கிளை பரப்பி நிற்கும் IDM Affiliated University College மீண்டுமொரு முறை தனது தன்நிகரற்ற சேவையின் சான்றாக தசாப்தங்கள் பல கடந்து நின்று நிலைக்கும் என் பதில் ஐயமில்லை.

IDM இன் முக்கியமான பாடவிதானமாக HND விளங்குகின்றது.HND பாடவிதானமானது (Syllabus) பட்டப்படிப்பிற்கான "விரைவு வழி" (Fast Track) என அழைக்கப்படுகின்றது. HND பாடநெறி உயர்கல்விக்கான நுழைவாயிலாகும். HND இன் குறுகிய கால பாடவிதானமானது வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு உயர் புள்ளிகளை வழங்குகின்றது. IDM Computer Studies (Island wide) HND பாடநெறிகளை இலங்கையிலே வழங்கி வரும் முதன்மையானதும் சிறந்ததுமான (Premier and the best) நிறுவனமாகும். ஏனைய நிறுவனங்களோடு ஒப்பிடும்போது IDM இல் கற்பதற்கான செலவு மிகவும் குறைவாகும். மேலும் HND கற்கை நெறி 4 பருவ காலங்களை (Semester) உள்ளடக்கியது. BTEC - Diploma in ICT எனப்படும் ஆரம்ப கற்கை நெறியை (Primary Diploma) பயிலும் மாணவர்களுக்கு HNDஇல் முதலாவது பருவகாலம் விலக்களிக்கப்படுகிறது. இதன்மூலம் மாணவர்கள் காலத்தையும் பணத்தையும் சேமிக்க முடிகின்றது.

அது மட்டுமல்லாது மேலும் ஒரு வசதியினையும் வழங்குகின்றது. சமாந்தரமாக (Parallel) இரண்டு பருவகாலங்களை கற்க முடிகின்றமை HND பயிலும் மாணவர்களை மேலும் குறுகிய காலத்தில் துறை சார்ந்த நிபுணராக (Field Expert) மாற்றுகின்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
செல்வி வ.சோதிரட்ணம்
அவர்களின் அன்புத் தந்தை

### செல்லையா சோதிரட்ணம்

காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய். (88665)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கல்விசாரா ஊழியர்கள், பழைய
மாணவர் சங்கம், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்.

## தவறிவிட்டது

371/10, ஆடியபாதம் வீதி, நல்லூர் மாக்கெற், கல்வியங்காடு, யாழ்ப்பாணம் என் னும் முகவரியுடைய தங்கவேலாயுதம் சுரேந்திரன் என்பவரது தே.அ.அ.(711832076V) யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொ.பே.021 2228460 (88412)

## விற்பனைக்கு

தையல் மிசின் (யுக்கி ஒலக்), கத்தரிக்கோல், கண்ணாடி பிற்றிங், கேபிள் ரெலிபோன், மோட்டார் சைக்கிள் (MD 90)

குமார் தையல் கடை,
தாவடி. 0777 111486 (88662)

## யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வெற்றுக்காணி தேவை

பிரசித்திபெற்ற நிறுவனத்திற்கு வெற்றுக்காணி களஞ்சியசாலைக்கு கீழ் காணும் வசதிகளுடன் தேவைப்படுகிறது.

★ யாழ்ப்பாண நகர எல்லைக்குள்

★ பிரதான வீதி முகப்புடன் .கொள்கலன்கள செல்லக்கூடிய

★ 50 பேர்ச் அல்லது மேல் விரும்பத்தக்கது.

பதிவு செய்வதற்கு
தயவு செய்து கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
0773219435, 0773295715

## DISTRICT SECRETARIAT JAFFNA
## INVITATION FOR BIDS
## VADDAKIN WASANTHAM DEVELOPMENT PROGRAMME-2009

| No | Particulars | Required Nos. | Non Refundable Deposit (Rs) |
|---|---|---|---|
| 01 | Supply and Installation of Sprinkler Irrigation System | 577 units | 1000.00 |
| 02 | Supply and Installation of Drip Irrigation System | 195 units | 1000.00 |

1. The Government Agent, Jaffna invites sealed Bids From eligible and qualified bidders for the supply and installation of Sprinkler Irrigation System and Drip Irrigation System for the selected beneficiaries.
2. Interested Bidders may obtain information from the Office of the Deputy Director of Agriculture, Extension, Palaly Road, Jaffna on any working days from 9am to 4pm. Contract No 021 222 2175.
3. A complete set of bidding documents in English language may be obtained by interested Bidders from the Finance Branch of the office of the Deputy Director of Agriculture (Ext) from 08.09.2009 until 22.09.2009 between 9.00am to 4.00. pm upon payment of non refundable fees of rupees Thousand (1,000.00) at the Finance Branch of the Office of the Deputy Director of Agriculture (Ext) or by submission of a Cheque in favor of Deputy Director of Agriculture (Ext).
4. Bid shall be deposited in the Tender box or sent by under Registered Post to reach the District Planning Secretary, District Secretariat, Jaffna on or before 22.09.2009. Late Bids will be rejected.
5. Bids will be opened on 22.09.2009 at 4.00pm. after closing in the presence of Bidders or their authorized Representatives at the, District Secretariat, Jaffna.
6. Duly filled and sealed Bids to be marked "Bids for Procurement of Supply and Installation of Sprinkler Irrigation System/ Bids for Procurement of Supply and Installation of Drip Irrigation System" on the left hand corner of the

K.Ganesh
Government Agent/ District Secretary,
District Secretariat, Jaffna. (சி/560792)

## தவறிய நகை உரியவரிடம்

யாழ்ப்பாணம்,செப்.8

தவறவிடப்பட்டுள்ள கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகக்கடந்த 7ஆம் திகதி'உதயன்' பத்திரிகையில் வெளியாகிய செய்தியைப் பார்த்து கைச்சங்கிலியின் உரிமையாளரான தங்கராசா சோபனா அதனைப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,செப்.8

இளவாலை,முள்ளானை கூத்து மாலை ஓடைபால விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகதின சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 5 மணிக்கு சாயரட்டைப் பூசை ஆரம்பமாகித் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று சுவாமி திருவீதியுலா வருவார். (204)

## யாழ்கோ பாற்பொருள்கள் விநியோகம்

எமது சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் யாழ்கோ பாற்பொருள்கள் புதிய விலை நிர்ணயத்துடன் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எமது யாழ்கோ பாற்பொருள்கள் தொடர்ச்சியாகக் கிடைக்காத வாடிக்கையாளர்கள் 0602212926 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் உடன் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/560790)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்



(உரிமையாளர் - கணபதிப்பிள்ளை அன்.சன்.மருந்துக்கடை, நல்லூர்]

78, சட்டநாதர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் நேற்று (07.09.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

78, சட்டநாதர் வீதி, நல்லூர்.
தொ.பே.இல.: 060 221 9845

தகவல்:
குடும்பத்தினர். (88658)

## ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி




### அமரர் பண்டிதர் அ.ஆறுமுகம்

விசவத்தனை வேலவர் பாதத்தை வணங்கி நினைவு கொள்வோம்.

அமரர் பண்டிதர் அ.ஆறுமுகம் வாழ்ந்த காலத்தில் செய்த செயற்கரிய காரியங்கள் சிலவற்றை நினைவு கொண்டு சென்ற அறக்கொடை பரிசளிப்பு நினைவுரையில் இருந்து திரட்டப்பெற்ற சில துளிகள் வருமாறு

பண்டிதர் மாணவர் பல்ரைத் துறைசார்ந்த அறிஞர்களாக - கல்வியாளர்களாக விளங்கச் செய்தமையால் இவர்களில் ஒருவராக வாழ்ந்துவரும் பண்டிதை பொன்.பாக்கியம் தமது வாழ்வை வளம்படுத்திய குரு - நல்லாசான் - நல்வாழ்வு வாழ வைத்த பெருமை பண்டிதரையே சாரும் என்பதை கூறி இன்புறுவதையும் இவர் செல்லும் இடம் எங்கும் உரையாற்றிப் பெருமையுறுவதை நாம் கேட்டு மகிழ்கின்றோம்.

*பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் முற்றுப் பெறாதிருந்த உள்பிரகார சுற்றுமண்டப வேலைகளை நிறைவுசெய்ய திருமதி க.பராசக்தி அம்மையார் மூலமாக பல லச்சக் கணக்கான பணத்தைச் செலவு செய்து நிறைவாக்க பண்டிதர் கையாண்ட திறமையை நினைவு கொள்ளத் தக்கதும் - பாராட்டத் தக்கதுமாகும்.

*எமது பகுதி ஆலயங்களில் நியமமாக வசந்த மண்டப பூசை வழிபாடுகளின் போது வேதமந்திரம் கூறி, தீபாராதனை நடைபெற்று (திருமுறை) பஞ்சபுராணம் ஓதியபின்னர் குருவானவர் ஆசீர்வாதம் கூறி, யாவரும் ஏற்று பத்தியுறச் செய்ததையும் - வித்தியாலயம், கிராமம் ஆகிய இடங்களில் தமிழ், சைவ விழாக்களை நடத்தி அருளாளர், அறிஞர்களை அழைத்து பண்டிதர் முன்னின்று நடத்தி இந்தமண் பெருமையுற வைத்ததை யாரும் மறக்க முடியாது.

*இன்பமே சூழ்க! எல்லோரும் படித்து இன்புற விசவத்தனை முருகப்பெருமான் அருள்பேறு நிறைந்த விசவத்தனை முருகன் பிள்ளைத் தமிழ், ஊஞ்சல் ஆகிய இரு நூல்களை ஆக்கி எமக்களித்த பண்டிதர் அ.ஆறுமுகனார் நாமம் என்றுமே நினைவாக விளங்கும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

அறக்கட்டளை
(சி/560791) நினைவுக் குழுவினர்.

## மெகா புலமைப்பரிசில் 2009

## WIN 75% SCHOLARSHIP ON TOTAL COURSE FEE

அறிவுத்திறனை நிரூபித்து வெல்லுங்கள் !

September 13th ஞாயிற்றுக்கிழமை



இலவச பரீட்சை அனுமதிகளை இன்றே பெற்றிடுங்கள் !

**O/L, A/L** பரீட்சைகளின் பின் **Why Pay More?**

உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் மெகா இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி, பெறும் மதிப் பெண்களுக்கமைய 75% வரையிலான ஸ்கொலர்சிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

**Be a Job Ready Student**

உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்விக்கும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கும் A/L பெறுபேறுகளின் முன் நீங்களும் தயாராகுங்கள்.

- மெகா புலமைப்பரிசில் பரீட்சை ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே!
- இப்புலமைப்பரிசில் பரீட்சைக்கு கட்டணங்கள் கிடையாது
- பொது அறிவு மற்றும் G.C.E. (O/L) பாடத்திட்டத்திற்கு அமைவாக 50 MCQ வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
- இப்பரீட்சையை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.
- அடிப்படைத் தகைமை G.C.E (O/L)

Collect Your Free Admission Card, Today !

விரையுங்கள், வெற்றிபெறுங்கள் !

புலமைப்பரிசிலுக்கான கொம்பியூட்டர் பாடநெறிகள்

| | |
|---|---|
| Software Engineering | 4 Months |
| Hardware & Networking | 2 Months |
| Office Automation | 4 Months |
| Macromedia Applications | 4 Months |
| Graphic Design | 4 Months |
| Digital Pre-press | 3 Months |
| Digital Video Production | 3 Months |
| Advanced Java Programming | 4 Months |
| Web Design & Development | 3 Months |
| Pc Professional | 4 Months |
| Honours Diploma in Computer Application | 1 Year |
| Tally Acccunting | 2 Months |

## ASIAN - CSC COMPUTER EDUCATION

யாழ். நகர் 2G, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

நெல்லியடி கொடிகாமம் வீதி,நெல்லியடி. T.P : 6027340088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் துயரம் நீங்க தமிழகக் கட்சிகள் ஒன்றுதிரண்டு நிரந்தரத் தீர்வு காணவேண்டும்

## காங்கிரஸ் எம்.பி. வேண்டுகோள்



சென்னை, செப். 08

இலங்கைத் தமிழர்களின் பேரவலங்கள் தீர, இனியாவது தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் - என்று காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, சுதர்சன நாச்சியப்பன் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழக அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் உள்ள அரசியல் வேறுபாடுகளை மறந்து, ஒன்றிணைந்து, இலங்கைத் தமிழர்களின் துன்பம் தீர நிரந்தர தீர்வு காண வேண்டும். நாடு சுதந்திரம் அடைவதற்கும், சுதந்திரத்தைப் பேணிக் காப்பதிலும் தமிழர்களின் பங்கும், தொண்டும் கணிசமாக இருந்துள்ளன.

கடந்த 60 ஆண்டுகளாக மத்தியில் தமிழர்கள் முக்கிய பங்கு வகித்த ஆட்சிதான் இருந்து வந்திருக்கிறது. எந்த வகையிலும் தமிழர்களை தனிமைப்படுத்தி அவர்களுக்கு விரோதமாக செயற்பட வேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு எப்போதுமே இல்லை. தமிழின விரோதப் போக்கை மத்திய அரசு கடைப்பிடிக்கிறது என்பது தேவையற்ற வாதம்.

இலங்கையில் தமிழர்கள் இழந்த மாநிலத்தை, குடியிருப்புகளை, விவசாய நிலங்களை, தொழிற்பேட்டைகளை, வழிபாட்டுத் தலங்களை மீண்டும் த்மிழ் மக்களே பெறும் நிலையை கொண்டுவர வேண்டும். 25 ஆண்டுகளுக்கு முன்பு பெற்றிருந்த நிலையை மீண்டும் பெற்றுக்கொடுக்க வேண்டும். இதைச் செயற்படுத்த தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்து கட்சியினரும், தமிழ் இயக்கங்களும் ஒன்று கூடி முடிவெடுத்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

குறுகிய கால அரசியல் லாபத்துக்கு இடமளிக்காமல் தமிழினத்தின் வாழ்வுரிமையை முன்னிறுத்த வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் உள்ளது. காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன் சிங், ராகுல் காந்தி ஆகியோர் இந்தக் கருத்தையே கொண்டுள்ளனர். நமக்கு நாமே வசைபாடுவதும், குறை கூறுவதும் துன்பப்பட்டுக் கிடக்கும் லட்சக்கணக்கான தமிழரை அலட்சியப்படுத்துவதாகும் - என்றுள்ளது.




# ஆந்திர முதல்வரின் வாழ்க்கை வரலாற்றை படமாகத் தயாரிக்கிறார் நடிகர் ராஜசேகர்

## உலக நாயகன் என்ற பெயரில்

நகரி, செப். 08

மறைந்த ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் வாழ்க்கை வரலாற்றை 'லோக நாயகுடு' (உலக நாயகன்) என்ற பெயரில் சினிமா ப் படமாகத் தயாரிக்க இருக்கிறோம்.

- இவ்வாறு நடிகர் ராஜசேகர் தெரிவித்தார்.

திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு நேற்றுமுன்தினம் இரவு நடிகர் ராஜசேகர் தனது மனைவி ஜீவிதாவுடன் வந்து சுவாமி தரிசனம் செய்தார்.



பின்னர் ராஜசேகரும், ஜீவிதாவும் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே இதனைக் கூறினர். அப்போது இருவரும் மேலும் கூறியவை வருமாறு -

மறைந்த ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி தற்போது நாடாளுமன்ற எம்.பி. ஆகவிருக்கிறார். இவர் ஆந்திர முதல்வர் பதவிக்குத் தகுதியானவர். துடிப்புமிக்க இளைஞர்.

தனது தந்தையுடன் சேர்ந்து பணியாற்றி அரசியல் அனுபவம் பெற்றவர். ராஜசேகர ரெட்டி அமுல்படுத்திய நலத்திட்டங்களால் மட்டுமே காங்கிரஸ் கட்சி ஆந்திராவில் 2 ஆவது முறையாக ஆட்சிக்கு வந்தது.

அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர அவரது மகன் ஜெகன் மோகன் ரெட்டியை முதல்வராக நியமிக்க வேண்டும் என்று நாங்கள் காங்கிரஸ் கட்சியைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஜெகன்மோகன் ரெட்டி, ஆந்திர முதல்வர் ஆவதற்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மறைந்த ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் வாழ்க்கை வரலாற்றை 'லோக நாயகுடு' (உலக நாயகன்) என்ற பெயரில் நாங்கள் சினிமாப் படமாக தயாரிக்க இருக்கிறோம் - என்றார்.

## ராஜசேகர ரெட்டியின் இரங்கல் கூட்டத்தில் கடும் அமளி:

# சோனியாவின் முடிவுக்குக் கட்டுப்படுவோம் முற்றுப்புள்ளி வைத்தார் ஜெகன்மோகன்!


ஐதராபாத், செப். 08

ஆந்திர அரசியலில் புதிய திருப்பமாக, தன்னை முதல்வராக்க வேண்டும் என யாரும் வலியுறுத்த வேண்டாம் என்றும், முதல்வர் யார் என்பதை காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்யட்டும் என்றும் மறைந்த ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராஜசேகர ரெட்டியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஐதராபாத்தில் நடந்த இரங்கல் கூட்டத்தில், ஜெகன் மோகன் ரெட்டியை முதல்வராக்கக் கோரி அவரது ஆதரவாளர்கள் அமளியில் ஈடுபட்டமையால் பரபரப்பு ஏற்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஜெகன்மோகன் ரெட்டி பங்கேற்கவில்லை.

இதனிடையே, கே.ரோசய்யா தலைமையில் 34 அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பதவியேற்றுக் கொண்டனர்.

ஹெலி விபத்தில் மரணமான ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டிக்குப் பின்னர் அடுத்த முதல்வர் யார் என்பதில் கடும் போட்டி ஏற்பட்டது. ஜெகன்மோகன் ரெட்டியை முதல்வராக்க வேண்டும் என ரெட்டியின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்பே சில எம்.எல்.ஏக்கள் பிரசாரம் மேற்கொண்டனர்.



இந்நிலையில், அடுத்த முதல்வர் யார் என்பதை கட்சி மேலிடம் முடிவு செய்யட்டும் என நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ராஜசேகர ரெட்டியின் வாரிசாக என்னைத் தேர்வு செய்யுமாறு வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் நடத்துவது, போராட்டம் நடத்துவது, பத்திரிகைகளுக்கு அறிக்கை அளிப்பது போன்ற நடவடிக்கைகளை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கிறேன்.

மக்களின் எண்ணங்கள், லட்சக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்களின் உணர்வுகள், மாநிலத்தின் நன்மை குறித்து தலைவர் சோனியா காந்திக்குத் தெரியும். ராஜசேகர ரெட்டியின் குறிக்கோளுக்கு பங்கம் விளையாதவாறு சோனியா காந்தி முடிவு எடுப்பார்.

எனவே, சோனியா காந்தியின் முடிவுக்காக நாம் காத்திருக்க வேண்டும். அவரது முடிவுக்கு கட்டுப்பட வேண்டும் - என்றுள்ளது.

# இன்று தமிழகம் வரும் ராகுலுக்கு 5 அடுக்குப் பொலிஸ் பாதுகாப்பு!

## அவர் பங்கேற்கும் நிகழ்வுகளில் கையடக்கத் தொலைபேசிக்கும் தடை

நாகர்கோயில், செப். 08

மூன்று நாள்கள் சூறாவளிச் சுற்றுப்பயணமாக தமிழகத்துக்கு இன்று வருகை தரும் அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்திக்கு 5 அடுக்குப் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

இன்று காலை 9.40 மணிக்கு திருவனந்தபுரம் வரும் ராகுல்காந்தி, அங்கிருந்து ஹெலி மூலம் நாகர்கோயில் வந்து சேருகிறார்.



ராகுல் வருகையையொட்டி, தேசிய பாதுகாப்புப் படை எஸ்.பி முகேஷ் குமார் யாதவ் தலைமையில் 13 பேர் கொண்ட மத்திய பொலிஸ் அதிகாரிகள் குழு நாகர்கோயிலில் முகாமிட்டுள்ளனன். அவர்கள் பாதுகாப்பு ஏற்பாடு களை கண்காணித்து வருகின்றனர். கொமாண்டோ படையினர், என்.எஸ்.ஜி மற்றும் மத்திய உளவுத்துறை, மாநில உளவுத்துறைப் பொலிஸார், மாநிலப் பொலிஸார், உள்ளூர்ப் பொலிஸார் என ராகுல் காந்திக்கு 5 அடுக்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்படுகிறது.

நாகர்கோயிலில் இருந்து 12.30 மணிக்கு ஹெலியில் ராகுல்காந்தி புறப்பட்டு, நெல்லை பாளையங்கோட்டை ஆயுதப் படை மைதானத்தில் வந்து இறங்குகிறார்.

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய நாடாளுமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் காங்கிரஸாரைச் சந்தித்துப் பேசுகிறார்.

பிற்பகலில் விருதுநகர் செல்லும் ராகுல் காந்தி, அங்கு விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் இளைஞர்களைச் சந்திக்கிறார்.

பின்னர், மதுரை சென்று, காமராஜர் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார். இதைத் தொடர்ந்து, தமிழக காங்கிரஸ் இளைஞர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார். ராகுல்காந்தி பங்கேற்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் உரிய அடையாள அட்டை பெற்றவர்களே அனுமதிக்கப்படுவர். கையடக்கத் தொலைபேசி உட்பட எந்தப் பொருளையும் எடுத்துச் செல்ல அனுமதியில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குடும்பநல உத்தியோகத்தர் பதவி; மேலும் 31 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 08

குடும்ப நல உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கு மேலும் 31 பேர் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான பயிற்சிநெறி உடனடியாக ஆரம்பமாகவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்களை அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்விச்சான்றிதழ் (மூலப்பிரதி), திருமணமாகாதவர் என கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் உள்ளிட்ட ஆவணங்களுடன் நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு :-

சி. மேகலா - 170, சாவகச்சேரி மகளிர் கல்லூரி நலன்புரி நிலையம், மா. நிரஞ்சலா - கைதடி மேற்கு, சி. சகிலா - கோட்டைக்காடு, சுன்னாகம், கோ. சிவசக்தி - அராலி தெற்கு, க. தர்சினி - வட்டுக்கோட்டை கிழக்கு, செ. தர்சிகா - கோப்பாய் மத்தி, கோ. றஜிதா - நீர்வேலி வடக்கு, க. துவாரகா - அராலி தெற்கு, வி. மேரி ஜெனா - நெடுந்தீவு கிழக்கு, யோ. சிந்துகா - ஏழாலை மேற்கு

தே. கல்யாணி - ஊ-8-11 இராமாவில் முகாம், கொடிகாமம், ந. புகழினி - கைதடி கிழக்கு, இ. பிரேமிலா - அத்திராயன் வடக்கு, தாளையடி, ச. நிரோஷா - தொட்டிலடி, சங்கானை, செ. சுவர்ணா - கோப்பாய் தெற்கு, தெ. தர்சினி - புலோலி வடகிழக்கு, பு. கஜனி - சங்கரத்தை, ந. யாழினி - உரும்பிராய் வடக்கு, தே. மேனகா - இடைக்குறிச்சி, வரணி, பா. விதுப்பிரியா - கோப்பாய் வடக்கு

த. நிருஜா - தொண்டைமானாறு, கு. ஜீவகா - நல்லூர், ச. ரேணுகா - திருநெல்வேலி கிழக்கு, இ.கௌதமி - 261/6, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம், சி.காயத்திரி - ஏன்னக்கப்பிட்டி, காரை நகர், ரி. சாயிஜனனி - துன்னாலை, கே. கிருஸ்ணவேணி - நெடுங்காடு, காரை நகர், ஏ. எம். ஜே. யூலியானா - போயிட்டி, அச்செழு, எஸ். கார்த்திகா - இல.240, ஸ்ரான்லி வீதி [illegible] கௌரிகா - நெல்லியடி [illegible], இ. கார்திகா (அ. அட்டை 856691482V) (1)

# தென்மராட்சி அதிபர்கள், ஆசிரியர்களுக்கான குறைகேள் நடமாடும் சேவை நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், செப்.08

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான குறைகேள் நடமாடும் சேவை, நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை அதிபர்களினதும், பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை ஆசிரியர்களினதும் விண்ணப்பங்கள் நடமாடும் சேவையில் பரிசீலிக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றவுள்ளனர். (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன உடைமை மாற்றம் குறித்து தொடர்பு கொள்ள அறிவுறுத்து

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அனைத்து மோட்டார் வாகன உடைமை மாற்றம், சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பாக 2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் விண்ணப்பித்து இதுவரை வாகன பதிவுச் சான்றிதழ் சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத வர்களை நாளை புதன்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவுடன் அவை தொடர்பான ஆவணங்களுடன் சமூகமளிக்கும்படி கரவெட்டி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

## பற்றைக்குள் மீட்கப்பட்ட சிசு ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், செப்.8

மானிப்பாயில் பற்றை ஒன்றினுள் இருந்து படுகாயத்துடன் மீட்கப்பட்ட சிசு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

மானிப்பாய் பொன்னையா வீதியில் பற்றை ஒன்றினுள் இருந்து நேற்று மாலை 3.30 மணியளவில் மானிப்பாய்ப் பொலிஸாரால் தலையில் படு காயமடைந்த நிலையில் சிசு ஒன்று மீட்கப்பட்டது.

பிறந்து சில மணி நேரமே ஆனதாகக் கருதப்படும் அந்த சிசுவை மானிப்பாய் பொலிஸார் யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்த சிறிது நேரத்திலேயே அந்தச் சிசு இறந்து விட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணீர்க் காணிக்கை



இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரான ஜெயமுகுந்தன் அவர்களின் அன்புத் தாயாரான

### அமரர் அன்னலெட்சுமி திருச்செல்வம்

அவர்களின் மரணச்செய்திகேட்டு துயர் அடைந்தோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(88661)

இளைஞர் உருவாக்கல் இயக்கம்,
புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.


JOHNS
Communication & Browsing Center

நவீன மயப்படுத்தப்பட்டு புதுப்பொலிவுடன் மங்கலகரமாக இன்று ஆரம்பிக்கப்படும்






Net Call
Visual Call
E - Mail
Internet
Photo Designing
Computer Printing
Computer Typing

பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அதற்கு வேண்டிய தகவல்களை இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள மிகக்குறைந்த மாதாந்தத் தவணைக் கட்டணவசதியுடனும்

முற்றிலும் நவீன முறையிலாக அமைக்கப்பட்ட

உலகநாடுகளில் உள்ளவர்களுடன் மிகக்குறைந்த கட்டணத்தில் கதைப்பதற்கு

வெளிநாட்டில் உள்ளவர்களை நேரடியாகப் பார்த்து கதைக்கும் வசதி

No.243, Hospital Road, Jaffna.
Tel: 021 222 3302 / 0217451570
E-Mail : bonesh-a@yahoo.com



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

விற்பனைக்கு

ஆயாதி கணித சிற்பசாஸ்திர, ஆகம முறைப்படி சிலா விக்கிரகம், தாம்பர விக்கிரகம், கலசங்கள், கொடி ஸ்தம்பம், கும்பகோணம், நகாஸ்குத்துவிளக்கு, ஆசனக்கற்கள், கோமுகை கற்கள், பிரதிஸ்டா யந்திரம், யாகசாலை, தேர் அலங்காரப் பொருள்கள், பித்தளைக் குடங்கள், செம்புகள், பித்தளைத் தட்டுகள், சில்வர், பித்தளை திருவாசிகள் அனைத்து சிற்பப் பொருள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த வியாபாரிகளுக்கு:

மதுரையில் இருந்து இறக்குமதி செய்த 12 பிரம்புக் குடை, 8 பிரம்புக் குடை, 9'', 12'', 19'' குடைகள், பாவட்டை குடைகள், 2', 4', 5', 6' தொம்பைகள், கிரீடங்கள், மார்புப் பதக்கம், வாசல் மாலைகள், வாசல் தோரணங்கள், திரைச்சீலைகள், முத்து மாலைகள், கல்யாண அன்பளிப்புப் பொருள்கள், வெண் சாமரை, கெண்டி மாலைகள் முதலான அனைத்துப் பொருள்களும் எம்மிடம் உடன் கொள்வனவுக்கு உண்டு.

தொடர்பு:-



காயத்ரி டிரேட் சென்டர்
142/p, ஆண்டிவால் வீதி, கொழும்பு-11
தொ.பே.: 011 4979684, 0114978185
(88661)


## மரண அறிவித்தல்



### கந்தையா சிவப்பிரகாசம்

புங்குடுதீவு குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் தற்பொழுது 699/2, கே.கே.எஸ். வீதியில் வசித்தவருமான கந்தையா சிவப்பிரகாசம் நேற்று(07.09.2009) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் பராசத்தியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியத்தின் (சின்னையா) சகோதரரும் காலஞ்சென்ற தளையசிங்கம், பாலசிங்கம், குணசிங்கம், கோபாலசிங்கம், யோகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் தர்மகுலராணி, ஜெயலெட்சுமி, அருந்தவநேசன், பிறேமகுமாரி, பிறேமறஞ்சினி, தயாபரநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம், சபாரெட்ணம், விஜயலெட்சுமி, சந்திரா, மோகனகாந்தன், பொற்செல்வி ஆகியோரின் அன்பு மாமனும் காயத்திரி, ஆரணியா, மனோரூபி, கஜந்தன், ஜீவியன், ஜனகன், ஜெனித்தா, அகல்யா, நிருபாஜினி, ஜனனி, காலஞ்சென்ற குஜேந்தினி, கிருத்திகா, சுபாஸ், ஆர்த்திகா, மீனுகா, தபிசன், விபிசன், நிரோசன், அகிசன், ஆருசன், ஈழவன் ஆகியோரின் அன்புப் பேரனும் தவமணிதேவி, சற்குணேஸ் வரி, இந்திராணி, பிறேமகௌரி, முத்துத்தம்பி, தேவதாஸ் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.09.2009) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

699/2, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(88681)

தகவல்:
கு.[illegible]
கிராம [illegible] புங்குடுதீவு.


உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு
வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும்
இலவச கணணிக் கருத்தரங்கு

இடம்: வலி.தென்மேற்கு பிரதேச சபை மண்டபம், மானிப்பாய்.

காலம்: 09.09.2009 (புதன் காலை 09மணி)

பிரதான அனுசரனை: IDM COMPUTER STUDIES(Pvt) LTD
SUTHUMALAI ROAD, MANIPAY.

IDM இன் அனைத்து கற்கை நெறிகளுக்குமான விளக்கங்கள் வழங்கப்படும்

அன்றே பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்

IDM
Nation's ICT Academy
re University College
Affiliated University College
IDM COMPUTER STUDIES(Pvt) LTD.
SUTHUMALAI ROAD, MANIPAY.



After A/L ???




உங்கள் பரீட்சைப் பெறுபேற்றுக்காக காத்திருக்கும் நாட்களில் கணனிக் கல்வி கற்பதில் குழப்பமா?
கவலையை விட்டு வாருங்கள்!

இடம்:- வீரசிங்கம் மண்டபம்
காலம்:- 09.09.2009 நேரம்:- 9.00am

நாங்கள் கை கொடுப்போம் ஏனெனில்....
உங்களுக்காகவே நாங்கள்.

ESOFT

கருத்துரை வழங்குவோர் :
Mr.M.IGNATIUS
B.A. (Hons).PGDE, M.Ed, SLEAS III
Principal,
Palaly Teachers' College.

Mr. V.ARULANANTHAM
B.A.(Hon),MA in Econ,Dip in Public Adm
Manager
National Savings Bank Jaffna.

மற்றும் எமது கொழும்பு தலைமை நிறுவனத்தின் விரிவுரையாளர்களும் பங்கு பற்றுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சனல் 4' வீடியோ குறித்து விசாரிக்க இலங்கை உயர் அதிகாரி பிரிட்டனுக்கு

கொழும்பு, செப்.8

'சனல்-4 ' வீடியோ காட்சிகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசின் சார்பில் உயர் அதிகாரி ஒருவர் வெகுவிரைவில் பிரிட்டனுக்குச் செல்ல உள்ளார் என்று தெரிய வருகிறது.

பிரிட்டனின் 'சனல்-4 'தொலைக்காட்சியில் தமிழ் இளைஞர்களை இலங்கை இராணுவத்தினர் சுட்டுக்கொல்கின்றமை போன்ற வீடியோக் காட்சிகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

இந்த வீடியோக் காட்சிகள் காரணமாக சர்வதேச சமூகம் இலங்கை அரசின் மீது பாரதூரமான கண்டனங்களையும் அதிருப்தியையும் வெளியிட்டு வருகின்றது.

இந்த வீடியோக் காட்சிகளின் உண்மைத் தன்மை குறித்து இலங்கை அரசு சந்தேகத்துக்கு இடமின்றி ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் இலங்கை அரசின் மீது பெரிய அளவில் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

இந்த நிலையில் இலங்கையின் உயர் அதிகாரி ஒருவர் அரச பிரதிநிதியாகப் பிரிட்டனுக்கு நேரில் சென்று 'சனல்-4' வீடியோக் காட்சிகள் தொடர்பாக அங்கு விசாரணைகளை மேற்கொள்ள உள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. (அ-சி)

## 'சனல் 4' நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு முஸ்தீபு

கொழும்பு, செப். 08

'சனல் - 4' தொலைக்காட்சி நிறுவனத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டமா அதிபர் ஆராய்ந்து வருகின்றார் என்று மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்றுக் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

'சனல் - 4' தொலைக்காட்சி ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய வீடியோக் காட்சி தற்போது பொய்யென நிரூபிக்கப்பட்டுள்ளது. 'சனல் - 4' நிறுவனம் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் இவ்வாறு செயற்பட்டது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் எமக்கு எதிராகச் செயற்பட்டது.

யுத்த காலத்தின்போது எமது படையினர் மக்கள் மீதும், வைத்தியசாலைகளங மீதும் ஷெல் தாக்குதல் நடத்துகின்றனர் என்று அத் தொலைக்காட்சி தொடர்ச்சியாகச் செய்தி ஒளிபரப்பி வந்தது.

வன்னியில் சில வைத்தியர்களின் உதவியோடு எமக்கு எதிரான செய்திகளை அது ஒளிபரப்பி வந்தது. இறுதியில் புலிகளின் அழுத்தத்தால் தான் அரசுக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டோம் என்று அந்த வைத்தியர்கள் கூறினர்.

'சனல் - 4'இன் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே நாம் இலங்கையில் இருந்த அந்நிறுவனத்தின் ஊடகவியலாளர்களை அவர்களின் நாட்டுக்கு அனுப்பிவிட்டோம்.

இப்போது அந்நிறுவனம் ஒளிபரப்பிய வீடியோக் காட்சி பொய்யானது என்று நிரூபிக்கப்பட்டு விட்டது. அந்நிறுவனம் அதை இனித் திருத்திக்கொள்ளவேண்டும்.

அந்நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டமா அதிபர் ஆராய்ந்து வருகிறார்.

இந்த வீடியோக் காட்சி தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்று நாம் சந்தேகிக்கின்றோம். இந்த நாட்டுக்கும் படையினருக்கும் அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்திருக்கின்றனர். இனிமேல் இவ்வாறான வேலைகளைச் செய்யவேண்டாம் என்று நாம் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம். - என்றார்.

# 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்றால் ஜனாதிபதியை ஹெல உறுமய ஆதரிக்காது

கொழும்பு, செப். 08

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செல்வாராக இருந்தால் அவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஆதரவை இழக்க நேரிடும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லமாட்டார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிமொழி வழங் கும் பட்சத்தில் மாத்திரம் அவரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது குறித்து சிந்திக்கலாம் என்று அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஜாதிக ஹெல உறுமயவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார் என்று தெரிய வருகிறது.

2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கின்றமை தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய அன்றைய பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவையும் பெற்றே அத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்று இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ஆனார். அவர் தமது பதவிக்காலத்தை இரட்டிப்புச் செய்வதற்காக மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலை நடத்த உள்ளார்.

இந்த நிலையிலேயே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது குறித்து ஜாதிக ஹெல உறுமய மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களைக் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## முகாமைத்துவ பீட விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 08

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை நெறிக்கு 2008/2009 ஆம் கல்வி யாண்டிற்கு அனுமதிக்கப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வும் விரிவுரையும் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் பீடாதிபதி கு.தேவராஜா தலைமையில் ஆரம்பமாகின.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பதிவாளர் காண்டீபன் ஆகியோரின் வாழ்த்துரையுடன் நேற்றைய நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. பல்துறை அறிஞர்கள் தொடர்ந்து உரையாற்ற இருப்பதுடன் ஆங்கிலம் சிறப்புக் கற்கை நெறியாகப் போதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

## பல்கலை. மாணவியின் சங்கிலியைத் திருட முயற்சி

வலி-வடக்கு,செப்.8

ஏழாலை, களபாவோடையில் தனிமையில் மோட்டார் சைக்கிளில் வந்த பல்கலைக்கழக மாணவியின் சங்கிலியை அறுக்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவியை வழி மறித்த பிறிதோர் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரின் சங்கிலியை அறுக்க முனைந்தனர். மாணவி கூக்குரலிடவே அருகில் உள்ள வீடுகளில் இருந்தவர்கள் அங்கு கூடியதையடுத்து மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இதேபகுதியிலேயே கணவனுடன் கோயிலுக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த பெண் ஒருவரின் தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அபகரித்து செல்லப்பட்டிருந்தது. (1-86)

## கடைக்குச் சென்று திரும்பிய பெண்ணின் தாலிக்கொடி பட்டப்பகலில் அபகரிப்பு

வலி-வடக்கு, செப்.08

உடுவில் அம்பலவாணர் வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கடைக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டனர். இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தனது தாலிக் கொடியை திருடர் அபகரித்துச் சென்றதாக பிரஸ்தாப பெண் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் இதேபாணியில் மோட்டார் சைக்கிளில் வரும் திருடர்கள் வீதியில் செல்லும் பெண்களை அச்சுறுத்தி நகைகளை அபகரித்துச் செல்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (1-86)

## இணக்கப்பாடின்றி இடையில் முறிந்தது பேச்சு
## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 350 ரூபாவுக்கு மேல் உயர்த்த முதலாளிமார் மறுப்பு

கொழும்பு, செப். 08

தோட்டத் தொழிலாளர்களின் 500 ரூபா சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துக்கும் கூட்டு ஒப்பந்தத் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சு எந்தவித இணக்கப்பாடுமின்றி முடிவுற்றது என தேசிய தோட்டத் தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் கே.வேலாயுதம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கொழும்பு, இராஜகிரியவில் அமைந்துள்ள முதலாளிமார் சம்மேளனத்தின் தலைமையகத்தில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இப்பேச்சு நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளரின் நாளாந்த சம்பளத்தை 350 ரூபா வரையே அதிகரிக்கலாம் என முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்தது. அதற்கு மேல் உயர்த்தவே முடியாது என முதலாளிமார் அடியோடு மறுத்தனர். இந்தப் போராட்டத்தினால் கம்பனிகளுக்கு அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் இதனால், போராட்டத்தைக் கைவிடவேண்டும் எனவும் முதலாளிமார் சம்மேளனம் கேட்டுக்கொண்டது. இதற்கு தொழிற்சங்கங்கள் முற்றுமுழுதாக தமது மறுப்பைத் தெரிவித்தன.

தாங்கள் கேட்ட 500 ரூபா சம்பள உயர்வைத் தரும்பட்சத்திலேயே இந்தப் போராட்டம் கைவிடப்படும் என கூட்டு ஒப்பந்தத் தொழிற்சங்கங்கள் தெரிவித்திருந்தன.

எனினும், இதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுப்புத் தெரிவித்ததையடுத்து எந்தவித இணக்கப்பாடுமின்றி இந்தப் பேச்சு முடிவுற்றது.

''இதுவரை நாம் முன்னெடுத்த போராட்டம் கம்பனிகளுக்கு நட்டம் ஏற்படாத வகையிலும் பொருளாதாரத்தைப் பாதிக்காத வகையிலுமே மேற்கொள்ளப்பட்டது.

இனிவரும் காலங்களில் இந்தப் போராட்டம் முற்றுமுழுதாக மாற்றமடையும்'' என தொழிற்சங்கங்கள் சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் அடுத்த கட்டம் தொர்பாக இன்று கூட்டு ஒப்பந்த தொழிற் சங்கங்கள் கூடி ஆராய்ந்து முடிவெடுக்கும் என்று தேசிய தோட்டத் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் தெரிவித்தார். (அ-சி)

## ஜீ.சி.ஈ. (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகளில் தேசிய பாடசாலைகளில் முதல் ஐந்து இடங்களில் யாழ்.இந்து

### கல்வியமைச்சின் பணிப்பாளர் அதிபருக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.8

கடந்த வருடம் நடந்த ஜீ.சி.ஈ. (சாதாரண தரப் )பரீட்சையின் பெறுபேற்றுப் பகுப்பாய்வின் போது தேசிய பாடசாலைகளில் முதல் ஐந்து பாடசாலைகளில் யாழ். இந்துக் கல்லூரியும் உள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் சார்பில் கல்விப்பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்) சிறிலால் நோனிஸ், யாழ்.இந்துக் கல்லூரி அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு-

1. 2008ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்படி பரீட்சைகளில் உங்களது பாடசாலையில் இருந்து தோற்றிய பரீட்சார்த்திகள் மிகச் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டுள்ளதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

2.க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழி மூலத்திலும், தமிழ் மொழி மூலத்திலும் 100 வீத சித்தியினை பெற்றுத் தந்துள்ளீர்கள். இது தேசிய பாடசாலைகளின் க.பொ.த (சா.த) பெறுபேற்றுப் பகுப்பாய்வின் போது முதல் 5 இடங்களுக்குள் உங்கள் பாடசாலை இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

3.அதேபோன்று 2008ஆம் ஆண்டு க.பொ.த (உ.த) பரீட்சை பெறுபேற்றின் படி உங்கள் பாடசாலையில் இருந்து அதிகமானோர் பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ளமை தெளிவாகின்றது. இதில் வைத்தியத்துறைக்கும், பொறியியல் துறைக்கும் யாழ்.மாவட்டத்தில் இருந்து அதிகமானோர் உங்கள் பாடசாலைகளில் இருந்து தெரிவாகியுள்ளமைக்காகவும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. பாடசாலையின் சிறந்த நிர்வாகம், ஆசிரியர்களது ஒத்துழைப்பு மற்றும் மாணவர்களது விடாமுயற்சி போன்றவற்றின் காரணமாக இதையிட்டு உங்களுக்கு எனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஏனைய பாடசாலையிலுள்ள அதிபர்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறீர்கள். எதிர்காலத்தில் வர்த்தகத்துறை, கலைத்துறை ஆகியவற்றையும் உள்ளடக்கி மேலும் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கும் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்- என்றுள்ளது. (அ-1)

## உடுவில்-மகளிர் கல்லூரியில் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பு

வலி.வடக்கு, செப். 08

உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ள அதிபரை மீள நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுக்காலை ஆரம்பான இந்தப் போராட்டம் முற்பகல் முடிவுக்கு வந்தது.'

வழமைபோல் இன்று வகுப்புக்கள் நடைபெறும் என அறியவந்தது. (அ-1-86)

## 'யுனிசெவ்' அமைப்பின் செயற்பாட்டில் எந்தப் பக்கச்சார்பும் கிடையாது

### ஐ.நா. அதிகாரி தகவல்

கொழும்பு, செப்.08

இலங்கையில் தனது செயற்பாடுகள் பக்கச் சார்பற்றவையாகவே விளங்கின என்று உறுதியாக கருத்துத் தெரிவித்துள்ள யுனிசெவ் அமைப்பு, உலக நாடொன்றிலிருந்து ஐ.நா. அதிகாரியொருவர் வெளியேற்றப்பட்டமை இலங்கையில் மட்டுமே இடம்பெற்றுள்ளது எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஐ.நா .அதிகாரி ஒருவரை வெளியேறுமாறு நாடொன்று உத்தரவிட்ட சம்பவம் உலகில் இலங்கையில் மாத்திரமே இடம் பெற்றுள்ளது என யுனிசெவ் அமைப்பின் பிராந்திய தொடர்பாடல் அதிகாரி சாரா குரே சுட்டிக்காட்டியுள்ளார்.

இது ஒருவகையில் புதுமையானது எனக் குறிப்பிட்டுள்ள அவர், உலகில் மிகவும் கொந்தளிப்பான பகுதிகள் உட்பட 140 நாடுகளில் நாங்கள் பணியாற்றுகிறோம். அரசுகளின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே அங்கெல்லாம் பணியாற்றுகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எமது அமைப்பு இலங்கையில் எவருக்கும் ஆதரவாகச் செயற்படவில்லை என்பதையும் உறுதியாகத் தெரிவித்துள்ளோம்.

யுனிசெவ் அமைப்பின் குரல் தொடர்ந்தும் பக்கச்சார்பற்ற கருத்தை வெளியிடுவதாக விளங்குகின்றது என நான் உறுதியாக நம்புகின்றேன் -என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



## அமெரிக்காவிடம் இலங்கை கோரிக்கை

அமெரிக்காவிலிருந்து செயற்பட்டு வரும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் வி.உருத்திரகுமாருக்கு எதிராக அந்த நாடு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக விரைவில் தமது பணியை ஆரம்பிக்கவுள்ள வெளிவிவகாரச் செயலாளர் பாலித கோஹன இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பயங்கரவாதத்தை ஆதரிக்கும், பயங்கரவாத அமைப்பொன்றின் உறுப்பினர் நீதியின்முன் நிறுத்தப்படவேண்டுமென பாலித கோஹன குறிப்பிட்டுள்ளார்.

உருத்திரகுமாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது சர்வதேச சட்டங்களின் கீழ் அமெரிக்காவுக்கு உள்ள கடப்பாடு எனவும் பாலிதகோஹன குறிப்பிட்டுள்ளார்.

## விடுதலைப்புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல நடித்துக்கொண்டிருக்கிறார்கள். தாக்குதல்களை நடத்தக்கூடிய சாத்தி யம் உண்டு.

பொலிஸ் மா அதிபர் ஜெயந்த விக்கிரமரத்ன மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மின்னேரியாவில் பொலிஸ் நிலையம் ஒன்றை நேற்றுத் திறந்து வைத்த போதே பொலிஸ் மா அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்ட கிழக்கை அண்டியே மின்னேரியா உள்ளது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் எஞ்சியுள்ள உறுப்பினர்கள் இரகசியமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் அச்சுறுத்தல் தொடர்கிறது. எனவே மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

எனவே பொதுமக்கள் சட்டம் ஒழுங்கைப் பேண பொலிஸா ருக்கு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் - என்று கேட்டுக்கொண்டார். (அ-1)

## முகாம் சேற்றுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேற்றுத் தரைகளில் நோயாளர்கள் படுத்துக் கிடக்கும் காட்சியையும் தமது முகத்தில் மொய்க்கும் இலையான்களைக் கலைக்க முடியாத அளவுக்கு உடல் சக்தி இழந்து, சோர்வடைந்த நிலையில் அசையாது கிடக்கும் காட்சிகளையும் அந்தத் தொலைக் காட்சி நேற்று ஒளிபரப்பியது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையத்தில் 'வ்ார் வித்த்வுட் விற்னஸ்' (War Without Witness) என்ற அமைப்பு கையடக்கத் தொலைபேசி மூலம் எடுத்த படங்களையே தாம் காட்சிப்படுத்தியதாக ''சனல் -4' தொலைக்காட்சி தெரிவித்தது.

வவுனியா அகதிகளுக்கு இப்போதே இந்த நிலை என்றால், இந்த மாத இறுதியில் பொழிய ஆரம்பிக்கவுள்ள பருவமழை கொட்டத்தொடங்கியதும் என்ன ஆகப் போகிறதோ, என்ற கவலை, பீதி அங்குள்ள மக்களை இப்போதே ஆட்கொண்டிருப்பதாக வீடியோக் காட்சிகளுக்கு விளக்கவுரை கொடுக்கப்பட்டுள்ளது. (அ-1)

உள்ளூர், வெளியூர் அழைப்புக்கள்
எல்லா நாட்களும்
எல்லா வலையமைப்புகளுக்கும் 5/- மட்டுமே...
அஸ்வினி மல்ரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
அழையுங்கள் : 021 567 7777

போட்டோ கொப்பி 3/-
(லெமினேற்றிங் செய்து கொள்ளலாம்)
→ லேசர் பிறிண்டிங் → AutoCAD பிறிண்டிங்
அஸ்வினி மல்ரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

தவறிவிட்டது

தி.நவநீதன் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் அடையாள அட்டை என்பன அடங்கிய சிவப்பு நிற 'File' வட்டுக்கோட்டைக்கும் காக்கை தீவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.
இல.411, கோயில் வீதி, நல்லூர், T.P : 0772914369

Vacancy Notice

மிக விரைவில் சாவகச்சேரி நகரில் அமையவுள்ள கணனி நிறுவனத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.
★Receptionist (Computer Skill, English , Age 20-28)
★Instructor (Male/ Female)
★Lecturers (Part time/ Full time)
நேர்முகத் தேர்வு எதிர்வரும் 12.09.2009 சனிக்கிழமை எமது நிறுவனத்தில் நடை பெறும்.
TARA *info tech*
Hensman Road, Chavakachcheri
(நீதி மன்றம் முன்பாக)

## அல்ஜசீரா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)-

இந்த நிலையில் 'அல்ஜசீரா தொலைக் காட்சி' சேவை வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் மீது இலங்கை அரசினால் 'அரச பயங்கரவாதம்' கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்று தனது சொந்த ஆய்வு மூலம் வந்து செய்தி வெளியிட்டுள்ளது.

உலகின் பிரபல தொலைக் காட்சி சேவைகளில் ஒன்றான 'அல்ஜசீரா தொலைக் காட்சி' சேவை இலங்கை அரசுக்கு மற்றுமொரு தலையிடியாக மாறலாம் என்றும் சர்வதேச அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

ஏற்கனவே 'சனல்-04' தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட வீடியோ காட்சிகளால் இலங்கை அரசு பலத்த பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றமை தெரிந்ததே. (அ-சி)

## 'சனல் - 4' வீடியோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவே இவற்றைக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

'சனல் - 4' தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட சர்ச்சைக்குரிய வீடியோ காட்சி தொடர்பாக நாம் எமது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த விடயத்தை நாம் பாரதூரமாக எடுத்துச் செயற்பட ஆரம்பித்துள்ளோம்.

தகவல் தொழில்நுட்பத்தில் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மூலம் நாம் வீடியோவை தனித்தனியாக 4 தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தினோம். நான்கு ஆய்வுகளும் ஒரே மாதிரியான பெறுபேறுகளைத்தான் காட்டுகின்றன. அதாவது அந்தக் காட்சி முற்றிலும் பொய்யாகச் சோடிக்கப்பட்ட ஒன்று என்றே அனைத்து முடிவுகளும் சொல்கின்றன.

அந்த ஆய்வின்படி, அந்த வீடியோ கையடக்கத் தொலைபேசியால் அல்லது 'கம்கோர்ட்' என்ற கருவியால் எடுக்கப்பட்டுள்ளது. வீடியோ எடுக்கப்பட்டு முடிந்ததும் அதில் சத்தம் தனியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

வீடியோவில் கேட்கும் துப்பாக்கிச் சத்தம் உட்பட அனைத்துச் சத்தங்களும் பிறகு சேர்க்கப்பட்டவைதான். இதுபோல் அதில் உள்ள பல விடயங்கள் பொய்யானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கைகளை நாம் ஐ.நா. செயலாளர் பான் - கீ - மூனுக்கு அனுப்பிவைக்கவுள்ளோம். நான் கடந்த வாரம் ஜெனிவா சென்றிருந்தபோது இந்த வீடியோக்காட்சி தொடர்பாக இலங்கையின் நிலைப்பாடு என்னவென்று அவர் என்னிடம் கேட்டார். இது தொடர்பாக விசாரணை நடத்தி விசாரணை முடிவுகளை உங்களுக்கு அனுப்பிவைப்பேன் என்று நான் அவரிடம் கூறினேன். அந்த அடிப்படையில் அவருக்கு ஆய்வறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

அதேபோல் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் இது தொடர்பாகப் பேசியிருந்தார். அவருக்கும் நாம் அறிக்கைகளை அனுப்பி வைப்போம்.

இந்தக் காட்சியை ஒளிபரப்பிய சனல் - 4, பி.பி.ஸி, அல் - ஜெஸீரா, சி.என்.என். உள்ளிட்ட அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் இவற்றை நாம் அனுப்பி வைப்போம்.

இந்த 4 ஆய்வுகளையும் நடத்த எமக்கு 10 நாட்கள் எடுத்தன. ஆய்வு மிகவும் வெற்றிகரமாக முடிந்துள்ளது. இது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம் - என்றார். (அ-சி)

A/L எடுத்த மாணவர்களுக்கான
SPOKEN ENGLISH With GRAMMER
By Mr.S. JAISAN
ஆரம்பம் 8.9.2009 (இன்று 5.00 பி.ப.)
Tue, Thu, 5-6 p.m
நாவலர்
ஆவைப்பந்தி யாழ்ப்பாணம்

PAPER CLASS
கணக்கீடு
திரு. தவா
புதன் - 6.00 a.m
பொருளியல்
திரு. சண்
செவ்வாய் - 3.00 p.m
வணிகக்கல்வி
திரு. யசோ
செவ்வாய் -4.30 p.m
யூனிவேர்சல்
தனிப்பாட அனுமதி உண்டு.

## உறவினர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று மாலை அலரிமாளிகையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்ட உறுதிமொழிகளை வழங்கினார்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற இச்சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் எம்.பிக்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, இமாம், தங்கேஸ்வரி, சிறிகாந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியுடன் அவரது சகோதரரும் வடக்குப் புனர்வாழ்வுச் செயலணித் தலைவருமான பஸில் ராஜபக்ஷ, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, வன்னிப்படைகளின் கட்டளை அதிகாரி ஆகியோர் அரச தரப்பில் பங்கேற்றனர்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் தொடர்பாகவே இச்சந்திப்பில் இரு தரப்பினரும் பேசினர். வவுனியா முகாம்களிலுள்ள அகதிகள் அனுபவிக்கும் அவலங்களை ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டிய கூட்டமைப்பு எம்.பிக்கள், இனிவரும் பருவமழை காலத்தில் இந்த மக்களின் அவலங்கள் இன்னும் அதிகரிக்கும் என்பதால் அவர்களை விரைவாக மீள்குடியேற்றவேண்டும் என்று எடுத்துக்கூறினர்.

அத்துடன், அங்குள்ள அரச அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டமைப்பு எம்.பி. கனகரட்ணம் போன்றோரை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

### அகதிகளை வைத்துக்கொண்டிருக்க தமக்கு விருப்பமில்லை என்கிறார் ஜனாதிபதி

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதி, "அகதிகளை அப்படியே வைத்திருக்க எனக்கும் விருப்பமில்லை. விரைவாக மீளக்குடியேற்றுவதைத்தான் நானும் விரும்புகிறேன். ஆனால், வன்னியில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பின்னரே மீள்குடியமர்வு சாத்தியம். விரைவாக கண்ணிவெடி அகற்றிமுடிப்பதற்காக 5 புதிய இயந்திரங்களைப் பணியில் ஈடுபடுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றி முடிந்ததும் படிப்படியாக அங்கு மீள்குடியேற்றம் செய்யலாம். ஆனால், வெளியிலுள்ள உறவினர்கள் வவுனியாவுக்கு வந்து முகாம்களில் உள்ள தமது உறவினர்களை உறுதிப்படுத்திவிட்டு அவர்களைக் கூட்டிச்சென்று தங்களுடன் வைத்திருக்கலாம்'' என்று கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று கூறி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளை இராணுவம் தடுத்து வைத்திருக்கிறது. அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிடவேண்டும் என்று கூட்டமைப்பினர் கேட்டனர். அதற்கு இணக்கம் தெரிவித்த ஜனாதிபதித் தரப்பினர், அந்த விவரங்களை முகாம்களில் உள்ளோர் பார்ப்பதற்கு வசதியாக அங்கும் ஒட்டுவதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

### கிளிநொச்சி, முல்லைத்தீவில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதாகக் கூறப்படுவது வெறும் வதந்தி

''தற்போது இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில், பொதுமக்களின் வாழ்விடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன என்று செய்திகள் வருகின்றன. இது இரு இனங்களின் நல்லுறவுக்குக் குந்தகமாக அமையும்'' என்று கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர். அதற்கு ஜனாதிபதி ''இல்லை, இல்லை. அப்படி எதுவும் அமைக்கப்படவில்லை. அது வெறும் வதந்திதான்'' என்று பதிலளித்தார்.

### தமிழ் எம்.பிக்கள் அகதிகளைப் பார்க்க அனுமதி....

''வவுனியா அகதிகளை வெளிநாட்டவர்கள் கூட சென்று பார்க்கின்றனரே. எமக்கு மட்டும் ஏன் அனுமதி மறுக்கிறீர்கள்?'' என்று கேட்டனர் தமிழ் எம்.பிக்கள்.

''சரி அதுபற்றி அடுத்த பாதுகாப்புக் கவுன்ஸிலில் ஆராய்ந்துவிட்டு உங்களுக்கு முடிவு சொல்கிறேன்'' என்றார் ஜனாதிபதி.

''யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கிலிருந்து 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தவர்கள் நீண்டகாலமாக அகதிகளாகவே உள்ளனர். யாழ். குடாநாட்டில் மக்களின் பகுதிகளுக்குள் இராணுவ முகாம்களும் சோதனைச் சாவடிகளும் அதிகமாகவுள்ளன. படையினரின் நடமாட்டமும் அதிகமாக உள்ளது. இப்போதும் அவைகள் எல்லாம் எதற்காக? வலிகாமம் வடக்கு உட்பட குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றிவிட்டு அங்கு மக்களைக் குடியேற்றலாம் அல்லவா.'' என்று கூட்டமைப்பினர் கேட்டதற்கு-

''அது பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இருந்தாலும் படிப்படியாக வலிகாமம் வடக்கிலும் மக்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களையும் குடியேற்றுவோம்'' என்று ஜனாதிபதியும் அவரது குழுவினரும் சொன்னார்கள்.

நேற்றைய இந்தச் சந்திப்பில் அகதிகள் தொடர்பான பல விடயங்களில் ஜனாதிபதி சார்பாக அவரது தம்பி பஸில் தான் அதிகமாகப் பேசினார். இரு தரப்பினரும் மாறி மாறி விவாதித்தனர். இனிவரும் காலங்களில் பஸிலுடன் தொடர்புகளை வைத்திருக்கும்படி கூட்டமைப்பினரை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

எனினும், இந்தச் சந்திப்பின்போது அரசியல் தீர்வு தொடர்பாக எந்தப் பேச்சும் எடுபடவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியுடனான இச்சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்ட தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் '' இது திருப்திகரமாக இருந்தது என்று இப்போதைக்குச் சொல்ல முடியாது.இச்சந்திப்பில் ஒப்புக் கொண்ட -உறுதியளித்த - விடயங்களை அவர்கள் எப்படி நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் இதிலுள்ள நன்மை தீமை பற்றிச் சொல்லமுடியும். அதுவரை கொஞ்சம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்'' - என்றார். (அ-சி)

## ரி.எம்.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அலுவலகத்துக்கு முன்பாக அக்கட்சியின் தலைவரான பிள்ளையானின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. அத்துடன், பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கு மிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து ஒருவர் பெற்றோல் ஊற்றி தற்கொலை செய்ய முயற்சித்தார் என்றும் கூறப்பட்டது.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரங்கனகல தலையிட்டு தான் 24 மணிநேரத்தினுள் இந்த கட்சி அலுவலகத்தை அகற்றுவார் என்றும் அல்லது தனது பதவியை ராஜிநாமா செய்வார் என்றும் உறுதிகூறியதையடுத்தே ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'பிள்ளையானின் முதலமைச்சர் பதவியை பறிக்க மீண்டும் மக்கள் போராட்டம்', 'தமிழ் மக்களின் உரிமைகளை பறிக்கும் ரி.எம்.வி.பி. கட்சி காரியாலயங்கள் தமிழ்மக்கள் வாழும் எந்தப்பிரதேசத்திலும் அமைக்கப்படக் கூடாது' போன்ற பதாகைகளையும் தாங்கியிருந்தனர். அத்துடன் கோஷங்களையும் எழுப்பினர்.

கடந்த 31 ஆம் திகதி குறித்த அலுவலகத்தை அகற்றக் கோரி ஆர்பாட்டம் நடைபெற்றதை அடுத்து அக்கரைப்பற்றுப் பொலிஸார் மூன்று நாள்களுக்குள் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கூறியிருந்தனர். எனினும், அதற்கு எந்தவித உறுதியான நடவடிக்கையும் எடுக்காததை அடுத்தே நேற்று இந்த ஆர்பாட்டம் நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
09.09.2009 முன் பதிபவர்களுக்கு விசேட கட்டணசலுகை
# Microsoft Office * English * Accounting
*DTP,Hardware * Web Developing
* Video Editing *AutoCAD * VB.net,LINUX
International Courses...
MCP_Microsoft Certified Professional
MCSE_Microsoft...Systems Engineer,ICDL
Sun Java programmer,Cisco-CCNA,
Degree Course * BIT Semester 1,3 & 5,Project
MCS
Supported By UNDP/JRRP
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாணம், 0772395895

நீங்களும் Engineer
A/L 2009 மாணவர்களும் பயிலலாம்.
★Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
★USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில் BSc,MSc
*தேர்ச்சி பெறும் அனைவருக்கும் Student Visa, Work Permit Carrier Guidance
★செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்களில்..
introducation to Network,Network Cabling,
Installing Windows Server 2003,2008 & Vista
Creating Network Connections
Installing Active Directory Services
Creating and Managing Domain Accounts
Shared Files and Folders(Shared Folder Permissions,Administrative Shared Folders, .....)
Streaming server(Video)......Etc
★MCS நிறுவனத்தில் மைக்ரோசொப்ற் கணினிப் பொறியிலாளர் கற்கை நெறியை பூர்த்தி செய்வோருக்கு மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் பரீட்சைக் கட்டணங்கள் மீள வழங்கப்படுகின்றன.
Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
Free Diploma in Hardware Technology-DHT,
INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL
324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org